வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.10.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 304 | பக்கங்கள் : 12




# உயர்நீதிமன்றத்தின் முன்பாக சட்டத்தரணிகள் போராட்டம்!

## முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலுக்கு நீதி வழுங்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 10

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கோரியும் உயர்நீதிமன்றம் முன்பாக நேற்றுப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது 11




## நாட்டின் நீதிச்சேவைக்கு அதி உச்ச அச்சுறுத்தல்!



கொழும்பு, ஒக். 10

நீதிச் சேவைக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல் வந்திருக்கின்ற நிலையில் தற்போது அது உச்ச நிலையை அடைந்திருக்கின்றதாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி நேற்றுக் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாதாரணமாக நாங்கள் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு அதில் எங்களுக்கு இணக்கமில்லை என்று சொன்னால் நாங்கள் அதற்கு மேற்பட்ட நீதிமன்றத்தை நாடுவோம்.

ஆனால், ஒரு நீதிபதிக்கே நியாயம் கிட்டாமல், ஒரு நீதிபதி நீதித்துறையில் தான் வழங்கிய தீர்ப்புக்காக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு, தன்னுடைய செயல்களுக்காக உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்.

தனக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது, தனக்கு மரண அச்சுறுத்தல் இருக்கின்றது என்று தன்னுடைய பதவி விலகல் கடிதத்திலேயே வெளிப்படையாகச் சொல்லி நாட்டை விட்டு போகின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகையால் 11

## கப்பல் சேவை பிற்போடப்பட்டது!

கொழும்பு, ஒக். 10

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான செரியாபாணி கப்பல் சேவை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக இருந்த நிலையில் பிற்போடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ரீதியான தடங்கல்கள் காரணமாக குறித்த கப்பல் சேவை பிற்போடப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு மீண்டும் ஆரம்பமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதித் தேர்தலையும் ஒத்திவைக்க இரகசிய நகர்வு

### சஜித் பிரேமதாஸ கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 10

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்துள்ள அரசாங்கம் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலையும் ஒத்திவைக்கத் தேவையான கூட்டுச் சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் இரகசியமாக செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் முறையை மாற்றியமைத்தல் என்ற ஐசிங் கேக் துண்டை நீட்டுவதன் மூலம் அரசாங்கம் 11

## வாகனங்கள் தவிர அனைத்து இறக்குமதி தடைகளும் நீக்கம்

கொழும்பு, ஒக். 10

பொருட்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி தடைகள் அனைத்தையும் நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி தடைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக 2020ஆம் ஆண்டு மார்ச முதல் அரசாங்கம் கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்குக் கூட அரசாங்கம் 11

## வடக்கு-கிழக்கில் 20ஆம் திகதி ஹர்த்தால்! தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

வடக்கு-கிழக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான நீதி விசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் 11



## வட மாகாண சட்டத்தரணிகள் பணிக்கு திரும்புகின்றார்கள்!

### வடக்கிலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் இன்று முதல் வழக்கம் போல இயங்கும்

யாழ்ப்பாணம், ஒக். 10

வட மாகாணத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் இன்று முதல் சட்டத்தரணிகள் வழக்கம் போல பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா விவகாரத்தில் நீதி கோரி நேற்று கொழும்பில் சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வட மாகாணம், கிழக்கு மாகாணத்திலுள்ள சட்டத்தரணிகளுடன் கொழும்பிலுள்ள சட்டத்தரணிகளும் நேற்று போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றைய போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர்.

இந்த 11

## பருத்தித்துறையில் சந்தேக நபரை நேற்று சுட்டுப் பிடித்த பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஒக். 10

நாற்பதுக்கு மேற்பட்ட குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் மீது துப்பக்கிசூடு நடத்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றிரவு தொடக்கம் மிக தீவிரமாக தேடிவந்த நிலையில் நேற்று குறித்த சந்தேக நபரது வீட்டைப் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசேதகர் தலைமையிலான பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

இதன்போது, பருத்தித்துறை பொலிஸ் நிலைய குற்றத்ததடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி மீது சந்தேக நபர் கத்தியால் குத்துவதற்கு முற்பட்டவேளை குறித்த பொலிஸ் அதிகாரி பின் நகர்ந்த போது கல் தடக்கி கீழே 11

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 10

ஈவினை, கிழக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிக் கொண்டு இருந்தவேளை மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இச் சம்பவத்தில் அச்சுவேலி 11

## இப்படியும் நடக்கிறது

இப்போதெல்லாம் அரசியல் ஆய்வாளர்களாக இருக்கலாம், பத்தி எழுத்தாளர்களாக இருக்கலாம், எல்லோருமே நடந்து முடிந்த மனித சங்கிலிப் போராட்டம் பற்றியே எழுதிக்கொண்டிருக்கின்றனர்.

லண்டனிலிருந்து தோழர் தம்பா, தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார், மருதனார்மடத்திலிருந்து முட்டாஸ் கடை சந்திவரை இருக்கும் தூரத்துக்கு மனித சங்கிலியாக மக்கள் நிற்கவேண்டுமெனில் அண்ணளவாக ஆயிரத்து ஐநூறுபேர் போதுமானது. எங்கள் பதினொரு எம். பிக்களும் ஆளுக்கு நூறு பேரைத் திரட்ட முடியாமலா இருக்கின்றனர்? என்று.

அவருடன் தர்க்கிக்க வேண்டியதாயிற்று, போராட்டத்துக்கு ஆட்களை திரட்டுவது என்பது முடியுமானதா அல்லது முடியாதா என்பது வேறு சங்கதி. ஆனால், ஏன் அப்படி திரட்டவேண்டும் என்று நினைத்தார்களோ தெரியவில்லை என்றேன்.

அவருடன் அதுபற்றி கதைத்தபோது- அல்லது தர்க்கித்த போதுதான் எனக்கு அந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

தமிழரசின் தளபதி அமிர்தலிங்கமும் காங்கிரஸின் தளபதி சிவசிதம்பரமும் தேர்தலில் தோற்றுவிட்ட பின்னர், கீரியும் பாம்புமாக இருந்த தமிழரசு கட்சியும் காங்கிரஸ் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒன்றிணைந்திருந்த சில மாதங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது.

அதாவது தமிழ் தேசிய அரசியல் என்பது நீறுபூத்த நெருப்பாக தகதகித்துக்கொண்டிருந்த காலம் அது.

வடக்குக்கு வரும் அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டி எமது எதிர்ப்பை தெரிவிப்பது என்பதுதான் போராட்டம்.

அப்படி அறிவித்த பின்னர் முதலாவதாக யாழ்ப்பாணத்துக்கு அப்போதைய நிதி அமைச்சர் என் . எம். பெரேரா விஜயம் செய்யவிருந்தார். அமைச்சர் என். எம்.பெரேராவின் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்புக்கொடி போராட்டம் நடத்தப்படும் என்றும், போராட்டத்தில் கலந்துகொள்ள நல்லூரிலுள்ள சிவசிதம்பரம் வீட்டில் ஒன்றுகூடுமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்பு விடுத்திருந்தது.

அப்போது வாலிபனாக இருந்த இந்த ஊர்க்குருவியாரும் நல்லூரில் சிவசிதம்பரம் வீட்டில் பிரசன்னமாகியிருந்தார்.

அப்போது அங்கே சில பத்து பேரே வந்திருந்தனர். கூட்டணியின் நிர்வாகச் செயலாளரான பண்டிதர் கா.பொ. இரத்தினம் ஐயா ஒரு மேசையில் இருந்துகொண்டு வந்திருந்த தொண்டர்களின் பெயர் முகவரிகளை எடுத்துக்கொண்டிருந்தார். அவ்வாறு எடுக்கப்பட்ட அந்த காகிதத்தில் தலைப்பாக கறுப்புக்கொடி போராட்ட வீரர்கள் என்று எழுதப்பட்டிருந்தது. வந்திருந்தவர்கள் எல்லோரும் தத்தமது பெயர் முகவரியை பண்டிதரிடம் கொடுத்துவிட்டு தமக்கு கொடுக்கப்பட்ட கறுப்புக்கொடிகளுடன் பலாலி வீதியில் ஓர் இடத்தில் கூடியிருந்தனர்.

மாலை நேரம் இருள் கவ்வத் தொடங்கிவிட்டது. என்.எம். பெரேரா வரவிருந்த விமானம் வருவது தாமதமாகிக்கொண்டே இருந்தது.

நன்றாக இருட்டிவிட்ட நேரத்தில் அங்கு வந்த பொலிஸ் அதிபர் எல்லோரையும் வீதியில் இருந்து இறங்கி கரையில் இருந்த வயலுக்குள் நிற்குமாறும், வீதியில் தடை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ள எல்லோரும் வயலில் இறங்கிவிட்டனர்.

என் .எம் .பெரேராவின் கார் அசுரவேகத்தில் எங்களைக் கடந்தபோது எங்கள் கைகளில் இருந்த கறுப்புக்கொடியும் இருட்டில் அவருக்கு தெரிந்திருக்குமோ தெரியவில்லை.

சில நாட்களில் அப்போது தபால் அமைச்சராக இருந்த குமாரசூரியர் வேலணைக்கு வருகைதரவிருந்தார். அதில் கலந்துகொள்ளுமாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களிடமிருந்து கடிதம் வந்திருந்தது, இந்த கறுப்புக்கொடி போராட்ட வீரரருக்கு.

நேற்று முன்தினம் டான் ரீ. வியில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பேட்டி ஒன்று ஒளிபரப்பாகியது. அதில் பேட்டியாளர் கேட்ட கேள்விக்கு, அதாவது மனித சங்கிலி போராட்டம் தொடர்பாக பதிலளித்த சித்தார்த்தன், 'மக்கள் அதுபோன்ற போராட்டங்களில் ஆர்வம் காட்டவில்லை என்பதற்காக நாங்கள் போராட்டங்களை நடத்தாமல் இருக்க முடியாது. நாங்கள் அதுபோன்ற பிரச்னைகளுக்கு எதிராக போராடிக் கொண்டுதான் இருக்கவேண்டும்' என்றார்.

அதனைப் பார்த்த நண்பர் ஒருவர் தொலைபேசியில் பேசினார்.

'மக்கள் அவர்களை தமது பிரதிநிதிகளாக தெரிவுசெய்து அனுப்பியிருப்பது அவர்கள் தங்கள் பிரச்னைகளுக்காக பாராளுமன்றில் பேசி, போராடி தமது பிரச்னைகளைத் தீர்த்து வைப்பார்கள் என்பதற்காகத்தானே. ஆனால்,இவர்கள் மீண்டும் மக்களை அல்லவா போராட அழைக்கிறார்கள்' என்று.

நீங்கள் போராடத்தான் வேண்டும், அதற்காகத்தானே மக்கள் உங்களை தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் போராடுவதன் மூலம் மக்களுக்கு அதனால் ஏதாவது கிடைக்கவும் அல்லவா வேண்டும் என்று சித்தார்த்தனிடம் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

நீங்கள் போராடத்ததான் வேண்டும், உண்மைதான் அது போராட்டமாக, இந்த நாட்டை உலுக்க அல்லவா வேண்டும். எங்கே, போராடவேண்டிய மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் நல்லூர் வாசலில் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கலாமே.

ஈஸ்டர் தாக்குதல் முடிவடைந்த சில நாட்களில் ரத்தின தேரர் கண்டியில் நடத்திய போராட்டம் எப்படி முழு நாட்டையும் பரபரப்பாக்கியதோ அதுபோன்ற ஒரு போராட்டத்தை நடத்தி நமது பிரச்னைக்கு தீர்வு கிடைக்கின்றதோ இல்லையோ அந்த நீதிபதி தமிழர் என்பதால் அடைந்த துன்பங்களை உலகறியவாவது செய்யலாம்.!

-ஊர்க்குருவி.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு மட்டக்களப்பில் நேற்று கடும் எதிர்ப்பு

**மட்டக்களப்பு, ஒக். 10**

**மட்டக்களப்பில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், நிகழ்நிலை காப்பு சட்டம் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு பேரணியும் போராட்டமும் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.**

**மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகிலிருந்து பேரணியானது ஆரம்பமாகி காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் ஞாபகார்த்த இடம் வரையில் வருகைதந்து அங்கு எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




கிழக்கு மாகாண சிவில் சமூகம் என்ற அமைப்பின் ஊடாக, இலங்கை அரசானது உடனடியாக அடக்குமுறை சட்டங்களை மீளப்பெறவேண்டும் என்ற தொனிப்பொருளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சிவில் சமூகம் சார்பாக முகமட் புஹாரி தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டு பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பேரணி சென்றது.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட முன்மொழிவை மீளப்பெறு, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும், தகவலை அணுகுவதும் கருத்துச்சுதந்திரமும் எங்களது அடிப்படை உரிமை, ஊடகத்திற்கு சுதந்திரம் மற்றும் சுயாதீனம் வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குடிமக்களின் உரிமைகளை பாதுகாக்க சட்டங்களை உருவாக்குங்கள்,அவர்களை ஒடுக்குவதற்கு அல்ல போன்ற பல்வேறு கோசங்களுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தின் முன்னாள் பிரதேச மற்றும் மநாகர சபை உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

இலங்கை நாட்டு மக்கள் பாரியதொரு சவாலான சூழலை கடந்து தங்களது பொருளாதார மற்றும் சமூக வாழ்வை நோக்கி பயணிக்க தொடங்கியுள்ள இக்கால பகுதியில் அரசானது அவர்கள் மீது ஈடுகொடுக்க முடியாத பாரிய ஒரு பொருளாதார சுமைகளையும், வாழ்க்கை செலவீனங்களையும், வரிச் சுமைகளையும் சுமத்தியுள்ளதோடு அரசிடம் இருந்து பாதிப்புற்ற மக்களுக்கு பெறக்கூடிய சமூக நலத்திட்டங்களையும் இல்லாது செய்வது அரசு மக்களுக்கு செய்கின்ற பாரியதொரு அநீதியும் உரிமை மீறலும் ஆகும்.

தற்போது அரசு சர்வதேச சமூகம் அல்லது நிதி நிறுவனங்களிடம் செய்து கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதை நோக்காக்க கொண்டு செயல்படுவது மக்களுடைய வாழ்வியலையும் பொருளாதார நிலைமையும் கேள்விக்குறிக்கி உள்ளாக்குகின்றன.இவற்றை எதிர்த்து மக்கள் போராட்டங்களையும் அரசை நோக்கி எழுப்புகின்ற கேள்விகளையும் அடக்குவதற்கான செயல்பாடுகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்றார்கள் என்பதனை மக்களாகிய நாம் நன்கு அறிந்துள்ளோம்.

குறிப்பாக கடந்த காலங்களில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் முடக்கப்பட்டு போராடியவர்கள் மீது அரச படையினர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் அதேபோன்று பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை குறிப்பிடலாம்.

அதேபோன்று எதிர்வரும் காலங்களில் அரசின் முடிவுகளுக்கு திட்டங்களுக்கும் மக்களால் மேற்கொள்ளப்படும் கேள்விகளையும் போராட்டங்களையும் கட்டுப்படுத்தும் நோக்கிலே அரசனது பல்வேறுபட்ட அடக்குமுறை சட்ட வரைவுகளை முன்மொழிந்து அதனை பாராளுமன்றத்தின் ஊடாக சட்டமாக்கி மக்களினுடைய அடிப்படை கருத்து சுதந்திரத்தினையும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தினையும் இல்லாது செய்வதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்ட வரைவுகளை முன்மொழியப்பட்டுருகின்றன.

அத்தோடு இச்சட்டங்கள் முற்று முழுதாக தகவல்களை அணுகுவதையும் கருத்து தெரிவிப்பதையும் ஊடக சுதந்திரத்தையும் இல்லாது செய்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆகவே இது ஒரு ஜனநாயக விழிமியத்தை மீறுகின்ற செயலாகும். ஆகையில் இலங்கை அரசன் முன்மொழிந்திருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நிகழ்நிலை அடக்குமுறை சட்ட வரைவுகளை உடனடியாக மீளப்பெற வேண்டும்-என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# மின்சாரத்தை துண்டிக்க சென்ற ஊழியர்கள் மீது சிலர் தாக்குதல்!

கொழும்பு, ஒக். 10

மதுரங்குளி, முக்குதொடுவா பிரதேசத்தில் மின்சாரத்தை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இருவரை மணல் வர்த்தகர் உட்பட சிலர் கொடூரமாக தாக்கியுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான புத்தளம் மின்சார சபை அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் இருவரே மின் இணைப்பை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முக்குதொடுவா பகுதியில் உள்ள மணல் வியாபாரியின் வியாபார இடத்தில் கடந்த ஒரு மாதமாக மின்கட்டணம் செலுத்தாததால் மின்சாரத்தை துண்டித்து விட்டு அங்கிருந்து வெளியேறி திரும்பிச் சென்றுகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்துக்கு மின்சாரத்தை துண்டிக்கச் சென்ற இரு ஊழியர்களும் அங்கிருந்த பெண்ணொருவருக்கு தெரிவித்துவிட்டு மின்சாரத்தை துண்டித்ததாக கூறப்படுகிறது.

(அ)

ஈழநாடு
Eelanadu
10.10.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் விவகாரம் மேலும் பின்னுக்குச் செல்லும்?

யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்களில் தமிழர் பிரச்னைக்கான தீர்வில் முன்னேற்றகரமான விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்தக் காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வருடங்கள்தோறும் சென்று முறையிட்டதிலிருந்து ஆணையாளரின் அறிக்கைகளால் பயன் கிட்டுமென்று நம்பியதிலிருந்து இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்ததிலிருந்து - தமிழ் மக்களை நோக்கி நன்மைகள் வருமென்று எதிர்பார்க்கப்பட்டன. ஆனால், காலம் விரயமானதேயன்றி ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறவில்லை.

ஆனால், சர்வதேச அரங்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் எவ்வாறு தமிழர் பிரச்னையை இரண்டாம் நிலைக்கு தள்ளிவருகின்றது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். ரஷ்ய - உக்ரைன் யுத்தம் சர்வதேச அரசியலின் முகத்தை திடீரென்று மாற்றியது. உலகின் முழுக்கவனமும் உக்ரைன் பக்கம் திரும்பியது. அந்த யுத்தத்தை எவ்வாறு முடிவுக்கு கொண்டுவருவதென்னும் கேள்விக்கான பதிலை காணமுடியாத நிலையில், தற்போது, ஹமாஸ் திடீரென்று இஸ்ரேலின் காசா பகுதியின்மீது தாக்குதலை மேற்கொண்டு, யூதர்கள் பலரை கொன்றிருக்கின்றது. இஸ்ரேல் யுத்தத்தை பிரகடனம் செய்திருக்கின்றது. இந்த யுத்தம் நீண்டதாகவும் சிக்கலானாதாகவும் இருக்குமென்று இஸ்ரேல் அறிவித்திருக்கின்றது. ஐரோப்பா ஒரு யுத்தத்தை எதிர்கொண்டுவருகின்றபோது - மத்திய கிழக்கில் பிறிதொரு யுத்தமுனை திறந்திருக்கின்றது. இந்த யுத்தம் எவ்வாறு முடிவுறுமென்று தற்போது எவராலும் எதிர்வு கூறமுடியாது - ஏனெனில், இது ஈரானை நோக்கிய பெரும் யுத்தமாகவும் விரிவு கொள்ளக்கூடும்.

இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய விடயம், இவ்வாறான பெரும் பிரச்னைகளோடு ஒப்பிட்டால் இலங்கை விவகாரம் ஒரு விடயமேயல்ல. ஒரு கோட்டை சிறியதாக்க வேண்டுமென்றால், அதன் அருகில் அதனைவிடவும் பிறிதொரு பெரிய கோட்டை கீறுவதன் மூலம் முன்னைய கோட்டின் மீதான கவனம் இல்லாமல் போய்விடும் என்பது போல் - தமிழர் விவகாரம் மேலும்மேலும் சிறியதாகி காணாமல் போகக்கூடிய சூழலே மேலோங்கியிருக்கின்றது.

இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டே 'ஈழநாடு' தொடர்ந்தும் யதார்த்தபூர்வமான அரசியல் அணுகுமுறைகளை முதன்மைப்படுத்தி வந்திருக்கின்றது. இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, அதிலிருந்து முன்னோக்கி நகர முடியுமென்பதையே நாம் அறிவுறுத்தி வந்திருக்கின்றோம். இந்த அடிப்படையில்தான் அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை நோக்கி திரும்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. அதுவே, இன்றைய அரசியல் யதார்த்தமாகவும் இருக்கின்றது. அதனை முழுமையாக அமுல்படுத்துவதற்குக்கூட, அனைத்து தரப்புகளும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியிருக்கின்றது.

சர்வதேசத்தை நம்பிக் கொண்டிருக்கும் தமிழர் அரசியலில் சர்வதேச அரசியல் அறிவோ மிகவும் பலவீனமாக இருக்கின்றது. கடந்த பதினான்கு வருடகாலம் முழுவதும் சர்வதேசத்தை நோக்கியதாகவே, அனைத்து எதிர்பார்ப்புகளும் நிலைகொண்டிருந்தன. ஆனால், சர்வதேசத்தை உற்று நோக்கி, அதற்கேற்ப, விடயங்களை கற்றுக் கொண்டு செயற்படும் ஆற்றலை எந்தவொரு தமிழ் தலைமையும் வெளிக்காட்டவில்லை. அவர்களால் இயலவில்லை என்பதுதான் உண்மை. சர்வதேசத்தை தெளிவாக உற்று நோக்கக் கூடியவர்கள் வந்து சேரக் கூடிய இடம் தற்போது இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்வதுதான்.

# அபிவிருத்தி எனும் பெயரில் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம்!

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 10

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார் வாழ்வுதயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது.

இப் பூமியானது நாம் அனைவரும் வாழ்வதற்கான பொது இல்லம். ஆகவே நாம் எமது முன்னோரிடமிருந்து எவ்வாறு வளத்தோடும் செழிப்போடும் இந்த இயற்கை வளங்களைப் பெற்றுக் கொண்டோமோ இவ்வாறு நமது நாளைய தலைமுறையிடம் கையளிக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உள்ளது.

இதனால் குறிப்பிட்ட நபர்கள் இதை அபகரிப்பதும், அழிப்பதும் குற்றமாகும். மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தலான முக்கிய விடயங்களை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கனியவள அகழ்வு, காற்றாலை திட்டம், சட்டவிரோத மண் அகழ்வு இந்திய இழுவைப் படகுகளில் அத்து மீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு, வனவிலங்குகள் சரணாலயத்திற்கு சொந்தமான காணிகள் தனி நபர்களினால் அபகரிக்கப்படுதல் என்பனவாகும்.

இவற்றினால் நாம் எதிர்நோக்கும் பாரிய விளைவுகள், பேரழிவுகள் பற்றி மக்கள் தெளிவடைய வேண்டும். சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு விநயமாக கேட்டுக்கொள்கிறோம். அதேவேளை, தொண்டு நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும், இயற்கை வள பாதுகாப்பு செயற்பாட்டாளர்களும், இயற்கைவள சட்டவாளர்களும், பொது மக்களும் இணைந்து செயலாற்றுவதற்கு அழைப்பு விடுக்கிறோம்.

இயற்கையைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எமது முழுமையான ஒத்துழைப்பு இருக்குமென கூறிக்கொள்கிறோம்- என்றார். (அ)

# கூரிய ஆயுதங்களுடன் நான்கு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 10

தெஹிவளை தர்மபாலராம வீதியிலுள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது கூரிய ஆயுதங்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களுடன் ஆறு வாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் களுபோவில முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினர் தெஹிவளை தர்மபாலராம வீதியில் வீதித் தடையை மேற்கொண்டபோது சந்தேக நபர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடம் 20 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர் வசிக்கும் வீட்டை சோதனையிட்டபோது, வீட்டில் தங்கியிருந்த மூவர் கைது செய்யப்பட்டனர் எனவும் குறித்த வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின்போது, வீட்டில் இருந்து ஆறு வாள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# இஸ்ரேலில் மேலுமொரு இலங்கையர் மாயம்!


கொழும்பு, ஒக். 10

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடம்பெற்று வருகின்ற மோதலில் மேலுமோர் இலங்கையர் காணமல் போயுள்ளார். அதன்படி, இதுவரை இரு இலங்கையர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

இலங்கை பிரஜைகளில் ஒருவர் காயமடைந்துள்ளனர். இருவர் காணாமல் போயுள்ளனர் என்று இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்தது.

காணாமல் போன இலங்கையர்கள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள தூதரகம், அவர்கள் இருக்கும் இடம் தொடர்பான தகவல்களைப் பெற முடியாவிட்டால் செஞ்சிலுவைச் சங்கதின் உதவி நாடப்படும் என்றும் தெரிவித்தது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 10 செவ்வாய்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 23
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஏகாதசி




**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். அவமானம்ஏற்படும். தானுண்டு தான் வேலையுண்டு என்றிருக்க வேண்டும்.

**சிம்மம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கைமாற்று வாங்க வேண்டி வரும்.

**மகரம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்களின் நிர் வாகத்திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# தமிழ்நாட்டுக்கு தண்ணீரை திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிடவேண்டும்!

## ஏகமனதாக நிறைவேறியது தீர்மானம்

**சென்னை, ஒக். 10**

**தமிழகத்துக்கு தண்ணீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில், தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கொண்டு வந்த தனித்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

சட்டப்பேரவையின் மழைக் கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது.

இதன்போது, "தமிழக விவசாயத்துக்கு அடித்தளமாக விளங்கும், காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட, உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, தமிழகத்துக்கு தண்ணீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்தி" தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு. க. ஸ்டாலின் தனித்தீர்மானம் கொண்டு வந்தார். இந்த தனித் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் ஸ்டாலின், தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து, அ. தி. மு. க. சார்பில் எடப்பாடி பழனிசாமி, பா. ம. க. சார்பில் ஜி. கே. மணி, காங்கிரஸ் கட்சியின் சார்பில் செல்வப்பெருந்தகை, புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் ஜெகன் மூர்த்தி, தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் வேல்முருகன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பில் ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் ஜவாஹிருல் லாஹ், ம. தி. மு. க சார்பில் சதன் திருமலைக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கே.மாரிமுத்து, மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகை மாலி, விசிக சார்பில் சிந்தனை செல்வன், ஆகியோர் முதல்வர் கொண்டுவந்த தனித் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

இத்தீர்மானம் முழுமையானதாகவும், நிரந்தர தீர்வை நோக்கியதாகவும் இல்லை எனக் கூறி பா. ஜ. க சார்பில் வானதி சீனிவாசன் எதிர்ப்பு தெரிவித்தார். பின்னர் பா. ஜ. க சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். இதைத்தொடர்ந்து, பேரவையில் தனித்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(ஐ)

# காவிரி விவகாரத்தில் பிரதமர் மோடி தனது பொறுப்பை மறந்துவிட்டார்!

*சென்னை, ஒக். 10*

காவிரி நதிநீர் விவகாரத்தில், பிரதமர் மோடி தனது பொறுப்பை மறந்து பேசுவதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்துக்கு காவிரி நீரை வழங்க வலியுறுத்தியும் கர்நாடக மாநில அரசு, மத்திய பா. ஜ. க. அரசைக் கண்டித்தும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் சீமான் கூறியவை வருமாறு,

காவிரி நதிநீர் பிரச்னையில் நீதிமன்றம் சென்றுதான் உரிமையை நிலைநாட்ட முடியும் என்றால், பாராளுமன்றம், சட்டப்பேரவை எதற்கு என்ற கேள்வி எழுகிறது. ஆனால், இந்திய பிரதமர், காவிரி நீர் பிரச்னைக்கும், தனக்கும் சம்பந்தமே இல்லாதது போல "இந்தியா கூட்டணியில் உள்ள இரு கட்சிகள் காவிரி நீருக்காக மோதிக் கொள்கின்றன" என்று பேசுகிறார். காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு தனக்கு இருக்கிறது என்பதை அவர் மறந்து பேசுகிறார்.

இந்திய இறையாண்மை, தேசிய ஒற்றுமை பேசும் பா. ஜ. க., காங்கிரஸ் கட்சிகள், கர்நாடகா என்று வரும்போது மாநில கட்சியாக மாறிவிடும். தமிழகத்தில் தேசிய கட்சிகள் தொகுதியை கேட்டுப் பெறும் நிலையிலும், அங்கு ஆளும் நிலையிலும் உள்ளன. எனவே, ஆட்சியை இழக்க அவர்கள் தயாராக இல்லை.

கர்நாடக மாநில முதல்வர், அந்த மாநில மக்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என கருதுகிறார். அதேபோல, தமிழக மக்களுக்கும் முதல்வர் ஸ்டாலின் உண்மையாக இருக்க வேண்டும் அல்லவா? தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுக்கும் காங்கிரஸுடன் கூட்டணி கிடையாது என்று தி. மு. க. அறிவிக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# தி. மு. கவுடனான கூட்டணியை தொடர்ந்து முன்னெடுப்போம்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

*சென்னை, ஒக். 10*

தி. மு. கவுடன் கூட்டணி தொடர்வதாகவும், பாராளுமன்ற தேர்தலின்போது அதிக இடங்கள் கேட்கப்படும் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலினை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமையிலான குழு சந்தித்தது.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு தகவல் அளித்த அவர்கள்,

பா. ஜ. க. கூட்டணியை எதிர்த்து இந்தியா கூட்டணி சார்பில் மக்கள் திரள் மாநாட்டை தமிழகத்தில் நடத்த வேண்டும்



என்று முதல்வரிடம் நினைவூட்டியுள்ளோம். பேசி தீர்மானிக்கலாம் என்று முதல்வர் தெரிவித்தார். மக்களின் பிரச்னைகள் குறித்து தெரிவித்தோம். நாளை டெல்டா மாவட்டங்களில் கடையடைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, இதற்கு மார்க்சிஸ்ட் சார்பில் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளோம்.

தி. மு. கவுடனான கூட்டணி நீடிக்கிறது. ஏற்கெனவே பெற்ற தொகுதிகளை விட குறைத்தா பேசுவோம், அதிகப்படுத்ததானே முயற்சிப்பார்கள். பேச்சின் போது எங்களின் கோரிக்கைகள் வைத்து சுமுக முடிவை எட்டுவோம்.

அ. தி. மு. கவிடம் இருந்து எங்களுக்கு எந்த அழைப்பும் இல்லை. அ. தி. மு. க.- பா. ஜ. க. பிரிந்தாலும், அவர்கள் ஒன்றாக இருந்தபோது எப்படி எதிர்த்து போராடினோமோ, அதே போராட்டம் இப்போதும் தொடரும். கடந்த 9 ஆண்டு கால பா. ஜ. க. செய்த துரோகத்துக்கு ஆதரவு அளித்துவிட்டு, தற்போது மாறிவிட்டதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல. அதிமுக பிரிந்ததால் புனிதமாகிவிட்டது என்று கூற முடியாது - என்றார்.

(ஐ)

# இரத்த தானம் செய்பவர்களின் யாழில் எண்ணிக்கை வீழ்ச்சி!

## வைத்தியர்ஜெய பாஸ்கரன் கவலை

யாழ்ப்பாணம், ஒக். 10

**யாழ்.மாவட்டத்தில் அண்மைய நாட்களில் இரத்த தானத்தை ஒழுங்கு செய்கின்ற ஒருங்கிணைப்பாளர்களும் தாமாக முன் வந்து இரத்த தானம் வழங்குபவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து கொண்டுசெல்வதாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர்ஜெய பாஸ்கரன் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

இரத்ததானம் வழங்குபவர்களின் எண்ணிக்கை குறைவுக்கு வெளிநாடு செல்கின்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பாக இருக்கலாம். அதே நேரம் நாட்டில் பொருளாதர நிலைமை இன்னொரு பக்கமாக இருக்கலாம்.

தேக ஆரோக்கியமாக இருக்கின்றவர்கள் நீங்கள் எந்த நேரமும் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இரத்தானத்தை வழங்கிச் செல்ல முடியும். நாம் அனைத்து பரிசோதனைகளையும் மேற்கொண்ட பின்னரே



உங்களிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்கின்றோம்.

ஆரோக்கியமானவர்களிடம் இருந்து மாத்திரமே தெரிவு செய்து இரத்தத்தை பெறுகின்றோம். இரத்ததானம் கொடுப்பதன் மூலம் உங்களுடைய ஆரோக்கியமானது வருடத்திற்கு ஒரு தடவையாவது பரிசோதிக்கப்படுகின்றது.

அதே நேரம் இரத்தம் கொடுப்பதன் மூலம் ஏற்படுகின்ற உடல் ஆரோக்கியம் இதன் மூலம் உறுதி செய்து கொள்ளப்படுகின்றது. ஆகவேஇரத்தம் வழங்குவது அளப்பரிய சேவையாக இருக்கும்-என்றார். (அ)

# உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். தபாலகத்தில் இரத்த தானம்!



யாழ்ப்பாணம், ஒக். 10

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பிரதம தபாலகத்தில் இரத்ததான முகாம் நேற்று சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

149 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பிரதமர் தபாலகத்தில் கொடியேற்றதுடன் உலக அஞ்சல் தின நிகழ்வுகள் இடம்பெற்றதோடு நேற்று தபால் ஊழியர்களின் இரத்ததான முகாம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி ஊழியர்களினால் குறித்த இரத்ததான முகாம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

கொடியேற்றத்தோடு ஆரம்பமான உலக அஞ்சல தின நிகழ்வில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.செந்தில்குமரன், பிராந்திய கணக்காளர் வை.ரதீஸ், யாழ்ப்பாண பிரதம தபாலக தபாலதிபர் ந.ஜெயகாந்தன் மற்றும் பிரதான சுங்க அத்தியட்சகர் மற்றும் தபாலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். (அ-01)

# யாழில் வாள்வெட்டு; இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் அரசடி பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வெள்ளை நிற காரில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டு விட்டு தப்பிச் சென்றனர்.

இச் சம்பவத்தில் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே காயமடைந்தார்.

மேலும் இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாட்டில் சீரற்ற வானிலை காரணமாக 70,000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 10

சீரற்ற வானிலையால் நாட்டின் பல மாவட்டங்களில் 18,898 குடும்பங்களைச் சேர்ந்த 71,320 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, மாத்தறை, காலி, நுவரெலியா, புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 555 குடும்பங்களைச் சேர்ந்த 1,910 பேர் 16 பாதுகாப்பான இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அனர்த்தம் காரணமாக 12 வீடுகள் முழுமையாகவும், 1,004 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# வீட்டில் இருந்த வயோதிப பெண்களை கொலை செய்து நகைகள் கொள்ளை!

கொழும்பு, ஒக். 10

மாத்தறை பிரதேசத்தின் ப்ரீத்தி பிரவுன்சில் பகுதியில் உள்ள வீடொன்றில் பணிபுரிந்து வந்த 67 மற்றும் 70 வயதான பெண்களை சிலர் கொலை செய்து விட்டு வீட்டில் இருந்த பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் உரிமையாளர் வீட்டில் இருந்து வெளியேறி மீண்டும் வருகை தந்தபோது பணிப்பெண்கள் இருவரையும் காணாத நிலையில் அயலவர்களுடன் இணைந்து தேடியுள்ளார். இதன் போது, அவர்கள் கொலை செய்யப்பட்டு கழிவறைக்குள் கண்டு பிடிக்கப்பட்டனர். இதனையடுத்து, சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சமயத்தில் வீட்டின் அலுமாரி உடைக்கப்பட்டு தங்கம் அல்லாத 12 வளையல்கள், 2 மாலைகள், தங்க கரண்டி ஒன்று மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் என்பன களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணையை ஆரம்பித்த மாத்தறை பொலிஸார் 25 வயதான சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதோடு அவரிடம் இருந்து திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர். (அ)

# 21 ஆயிரம் தொன் யூரியா உர விநியோகம் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 10

21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அரசாங்க உர நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து, இலங்கை உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் இணைந்து 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை நேற்று



முதல் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளன.

இந்த உரத்தை விவசாய சேவை நிலையங்களில் கொள்வனவு செய்ய முடியும் எனவும், 50 கிலோ யூரியா உரம் மூட்டை ஒன்று 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பருவத்தில் தட்டுப்பாடு இன்றி உரிய நேரத்தில் உரங்களை வழங்குவதற்கு, அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் தனியார் துறையும் இணைந்து ஏற்பாடுகளை செய்துள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# ஏ.ரி.எம். இயந்திரத்தில் ரூ. ஒரு கோடி கொள்ளை!

கொழும்பு, ஒக். 10

புத்தளம் - மதுரங்குளி 10 ஆம் கட்டைப் பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் ஏ.ரி.எம். இயந்திரத்தில் இருந்து ரூ.1 கோடிக்கும் அதிகமான பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற போது, மதுரங்குளி 10 ஆம் கட்டைப் பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் வங்கி ஏ.ரி.எம். இயந்திரத்திற்கு மோட்டார் சைக்கிளில் மூவர் முகங்களை மறைத்து மிகவும் சாதாரணமாக வந்தமை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

அவர்கள் ஏ.ரி.எம். இயந்திரம் பழுது என்றும் அதனை திருத்தப்போவதாகவும் கூறி, எவ்விதமான பதற்றமுமின்றி, திறப்பு ஒன்றின் மூலம் ஏ.ரி.எம். இயந்திரத்தின் பின் கதவைத் திறந்து பணம் வைக்கப்பட்ட பாதுகாப்பு அறைக்குள்ளே சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து, இரகசிய இலக்கங்களை உட் செலுத்தி குறித்த ஏ.ரி.எம். இயந்திரத்தை திறந்த கொள்ளையர்கள், ரூ.1 கோடிக்கும் அதிகமான பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த துணிகரமான கொள்ளைச் சம்பவத்தில் ஏ.ரி.எம். இயந்திரத்திரத்திற்கோ அல்லது பாதுகாப்பு அறையின் கதவுக்கோ எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட ஏ.ரி.எம். இயந்திரம் அமைந்துள்ள பகுதிக்கு அருகிலேயே எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ளதுடன், எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் பார்த்திருக்க, பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் வாகனப் போக்குவரத்துகளின்போதே கொள்ளையர்கள் இந்த துணிகர சம்பவத்தை நடத்தியுள்ளனர்.

அவர்கள் கொள்ளையிட்ட பின்னர் ஏ.ரி.எம். இயந்திரம் பழுதின்றி இயங்கியது.

குறித்த தனியார் வங்கியுடன் தொடர்புடைய ஒரு சிலரின் உதவியுடன் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடத்திற்கு வந்த புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினரும், கை ரேகை பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)

# பெரமுனவின் தலைமை பதவியை இளம் எம்.பி ஒருவருக்கு வழங்குக!

## மகிந்தவிடம் எம்.பிக்கள் சிலர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 10

**பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைப்பதவியை இளம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்குமாறு அக்கட்சியின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவிடம் எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

இந்த இளம் தலைமைத்துவத்தை வழிநடத்துவதற்கு சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை இணைத் தலைவராக நியமிக்குமாறும், கட்சியின் ஆயுட்கால தலைவர் என்ற அந்தஸ்தில் இருந்து தாங்கள் செயற்பட வேண்டும் எனவும் அந்த எம்.பிக்கள் மஹிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த கோரிக்கையை மஹிந்த ஏற்றுள்ளார் என அறியமுடிகின்றது. எனினும், மொட்டு கட்சிக்குள் தலைமைப்பதவிக்கு வருவதற்கு தகுதியான பலர் இருப்பதால் எவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையிலேயே முடிவு எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபயவை நாட்டு மக்களே ஜனாதிபதி வேட்பாளராக்கினர், அதேபோல நாட்டு மக்கள் ஏற்கும் ஒருவரையே கட்சி தலைவராக்கவேண்டும் எனவும் மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நிதி மோசடியில் ஈடுபட்ட தம்பதி

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 10

ருமேனியாவில் தொழில் வாய்ப்பு பெற்று தருவதாக தெரிவித்து இரண்டரை கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த தம்பதியினர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மாதம்பை - இரட்டைக்குளம் பகுதியில் குத்தகைக்கு தங்கியிருந்த குறித்த தம்பதியினர், தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுவதாக தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் குருநாகல் பகுதியிலுள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றில் பகுதி நேரமாக கடமையாற்றுவதாக தெரிவித்து அவர்கள் இவ்வாறு பண மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

சிலாபம், கற்பிட்டி, புத்தளம், ஆராச்சிகட்டுவ, மாரவில, நீர்கொழும்பு மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்டோரிடம் இருந்து அவர்கள் பணத்தை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# புகைப் பரிசோதனையை இனி மேற்கொள்ளப்போவதில்லை!

## கூறுகிறார் கெமுனு விஜேரத்ன

கொழும்பு, ஒக். 10

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் புகை பரிசோதனையை மேற்கொள்ள போவதில்லை என பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துள சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கான புகைப் பரிசோதனை மேற்கொள்ளாமையை தொடர்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து



கொண்டு கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், தரமற்ற எரிபொருள் பாவனையும் இதற்கு முக்கிய காரணமாகும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் முற்றாக குணமாக்கலாம்!

## வைத்திய நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ

கொழும்பு, ஒக். 10

மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அதனை முழுமையாக குணப்படுத்தலாம் என தேசிய புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்திற்கு பொறுப்பான வைத்திய நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் புற்றுநோயை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வதற்காக நிறுவப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு மேலதிகமாக 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்களை புதிதாக ஆரம்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களே 80 சதவீதம் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்தநிலையில், 30 வயதுக்கு முன்பு குழந்தை பெற்றிருக்காதவர்களுக்கும் மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாதத்திலும் உரிய தினத்தில் 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சுயமாக புற்றுநோய் பரிசோதனையை செய்துகொள்வது சிறந்ததாகும் என வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

மார்பக புற்றுநோய் தொடர்பிலான சுய பரிசோதனைகளை செய்துகொள்ளும் போது, வலியுடன் கட்டிகள், தோல் தடிப்பு, நிறம் மாறல், தோற்றத்தில் மாற்றம், மார்பகங்களில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள் உள்ளிட்ட மாற்றங்களை விரைவில் அறிந்துகொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு கொழும்பில்!

கொழும்பு, ஒக். 10

இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு நாளை முதல் இலங்கையில் இடம்பெறவுள்ளது.

இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு குறித்த மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்ற பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர், 2023ஆம் ஆண்டு முதல் அடுத்த 2 வருடங்களுக்கு இலங்கைக்கு தலைமைப் பதவியை வழங்கவுள்ளார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு கடல்வள பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, கடற்றொழில் முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிலப் பொருளாதாரம் உள்ளிட்ட 6 முக்கியமான பகுதிகள் தொடர்பில் இந்த மாநாட்டில் ஆராயப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் அப்துல் மொமன், ஈரான், மலேசியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அத்துடன், இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி சல்மான் அல் ஃபரிசி மற்றும் மொரிஷியஸில் உள்ள இந்து சமுத்திர வலய நாடுகள் சங்க செயலகத்தின் பணிப்பாளர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

நாட்டுக்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளதுடன், இலங்கையில் தங்கியிருக்கும் போது, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஏனைய அமைச்சர்களுடனும் இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளனர். (அ)

# உரும்பிராயில் வீட்டை உடைத்து திருடிய மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைது!

## ஏழு லட்சம் ரூபா பொருட்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடும்பிராய் மூன்று கோவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டை உடைத்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் மட்டக்களப்புக்குச் சென்று நீண்ட நாள்களுக்கு பின் வருகை தந்து வீட்டை திறந்து பார்த்தபோது வீடு உடைக்கப்பட்டு இருந்ததை அவதானித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்த கோப்பாய் பொலிஸார் நேற்று முன் தினம் மூன்று சந்தேகநபர்களை கைது செய்ததோடு குறித்த வீட்டில் திருடப்பட்ட ஏழு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம், உடும்பிராய், பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் குறித்த சம்பவத்துடன் தொடர்பட்டுள்ள மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து விலையுயர்ந்த தொலைக்காட்சி, மின்மோட்டர், மடிக்கணினி மற்றும் பெறுமதியான கைத்தொலைபேசி, தோடு, நவீன ரக கை மணிக்கூடு என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (அ)

# பிரதான ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 10

கிங் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், பத்தேகமை பகுதியில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நில்வளா கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக தல்கஹா கொடை மற்றும் பனதுகம ஆகிய பகுதிகளில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையை அடுத்து கலவெல்லாவ பகுதியிலும் வெள்ளநீர் புகுந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், களனி கங்கை, மகாவலி கங்கை உள்ளிட்ட ஆறுகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

கொழும்பு, ஒக். 10

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

எலிக் காய்ச்சலைத் தடுப்பதற்கான முன் சிகிச்சையை மக்க



ளுக்கு வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ள நிலைமை காரணமாக ஈக்கள் மற்றும் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

ஈழநாடு



# ரணிலின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கு வாக்கெடுப்பு!

## ரணில் - பசில் இரகசியப் பேச்சு

கொழும்பு, ஒக். 10

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான முன்மொழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிக்கொண்டவர் என்ற பெருமையுடன் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட முடியாத பட்சத்திலேயே இந்த யோசனை முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில், அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பசில் ராஜபக்ஷவும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

பொதுஜன பெரமுனவின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவிற்கு பெற்றுக்கொடுப்பது மற்றும் ஆதரவளிக்க மறுக்கும் கட்சியின் எம்பிக்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொதுத் தேர்தலில் தமக்கு ஆதரவாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள கட்சிகளின் ஆதரவை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

உத்தேச சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற பின்னர், ரணில் விக்கிரமசிங்க மேலும் ஒரு வருட காலத்திற்கு அரச தலைவராக நீடிக்க அனுமதிக்கும் வகையில் இதனுல் புதிய சரத்தொன்றை உள்வாங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தன் ஆன்மீக பயணங்களை மீண்டும் ஆரம்பித்த மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளுத்கமவில் உள்ள மலை விகாரையொன்றுக்கு சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

நேற்று முன் தினம் மாத்திரம் நான்கு விகாரைகளில் முன்னாள் ஜனாதிபதி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

இங்கு கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி,

“புதியவர்கள் அரசியலுக்கு வரவேண்டும். அவர்கள் முன் வந்தால் நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

பொதுஜன பெரமுனவுக்கு இளம் தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும். கட்சியின் தலைமையிலும் மாற்றங்கள் இடம்பெறும். நாமே தொடர்ந்து தலைமைத்துவத்தில் இருக்க முடியாது. புதியவர்கள் முன்வர வேண்டும்“-என்றார்.

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி சமய நடவடிக்கைகளில் அடிக்கடி ஈடுபட்டு வந்தார்.

குறிப்பாக விகாரைகள், கோயில்கள் உட்பட பல்வேறு மத ஸ்தலங்களில் மஹிந்த ஆசிர்வாதங்களை பெற்றுக்கொள்வார்.

சிறிதுகாலம் அவர் வழிபாடுகளில் ஈடுபடுவதில் இருந்து விலகியிருந்த நிலையில், மீண்டும் அவர் தமது ஆன்மீக பயணங்களை ஆரம்பித்துள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் தொடர்ச்சியாக அவர் ஆன்மீக பயங்களை மேற்கொள்ள உள்ளதாகவும் அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. (அ)

# தோட்ட தொழிலாளர் சம்பள பிரச்னை ஜெனிவா மாநாட்டில் எதிரொலித்தது!



கொழும்பு, ஒக். 10

“இலங்கை தேயிலை எனும் மங்காத நற்பெயரை ஈட்டுவதற்கு உழைப்பால் பாடுப்பட்டு தேயிலை தொழிலை வாழ்வாதார தொழிலாக முன்னெடுத்து இன்று இருநூறு வருடகால வரலாற்றை கொண்டவர்கள் இலங்கையின் மலையக மக்கள்.

இந்த மக்கள் பரம்பரையினர் இன்னும் அடையாளம் இல்லாமல் உரிமையற்றவர்களாக வாழ்ந்து வரும் நிலையில் இவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்பதை இந்த சபையில் தெரிவிக்கிறேன்.”

-இவ்வாறு மலையக மக்கள் முன்னணி இளைஞரணி தலைவர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்தார்.

ஐ.நா. சபையின் 40 ஆவது பொது விவாத கூட்டத்தொடரில் கலந்துகொண்ட லெட்சுமனார் சஞ்சய் அங்கு இலங்கை மலையக மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி உலகிற்கு எடுத்துரைக்கும் நோக்கில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் மலையக மக்களாகிய எமக்கு வளமான பின்னணியுடன் ஒரு வரலாறு உள்ளது. எம் மலையக மக்களின் வரலாறு 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது, இலங்கைக்கு அடையாளத்தை வழங்கியவர்கள் நாங்கள் என தெரிவித்த அவர் இலங்கை நாட்டில் பயிரிடப்பட்ட தேயிலை “சிலோன் ரீ”எனும் சர்வதேச நாமத்தை எப்பொழுதும் பிரபலமாக கொண்டுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இருந்தபோதிலும் அத்தேயிலையை பாதுகாத்து, பராமரித்து நாட்டுக்கு அன்னிய செலவானியை ஈட்டித்தரும்.

மலையக மக்களுக்கு அடையாளம் இல்லை என்பது வேதனைக்குரய விடயமாகும்

அத்துடன் உழைப்பு,கல்வி, சுகாதாரம்,வீடு,காணி என அனைத்து உரிமைகளிலும் எம் மக்களுக்கு பின் வரிசையாகவே இருக்கின்றது.அதேபோல உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதியும் எங்களுக்கு ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது என தெரிவித்துள்ளார்.

எமது மக்களின் அடிப்படைப் பிரச்னைகளில் முக்கியமானது உழைப்புக்கேற்ற ஊதியம். தொழிலாளர் சட்டத்தின் படி, ஒரு நபர் குறைந்தபட்சம் இன்றைய பெருமானாரின் படி மூன்று அமெரிக்க டொலருக்கு அதிகமாக பெறவேண்டும்.

ஆனால் இங்கு தனி நபர் அற்ற முழு குடும்பம் ஒன்று ஆறு டொலர்களையே வருமானமாக பெற்று குடும்ப சுவைக்கு ஆளாகும் நிலையில் உள்ளனர்.

இதனால் பெரும்பாலான பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். எனவே இது ஒரு அடிப்படைப் பிரச்னையாகும்.

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காத காரணமாக மலையக மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்னைகளையும், துயரங்களையும் சந்திக்கின்ற நிலையில் மலையகத்தில் பெரும்பாலான மாணவர்கள் வறுமை காரணமாக பள்ளியை விட்டு படிப்பினை கைவிடும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளிவிடப்பட்டுள்ளனர்-என்றார்.

(அ)

# சுங்க வருமான இலக்கை நோக்கி செல்வதில் அரசுக்கு பெரும் சவால்

கொழும்பு, ஒக். 10

வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் சுங்க வருமான இலக்குகளை நோக்கிச் செல்வதில் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் சுங்க வருமான இலக்குகளை எட்ட முடியாமல் போனமை தொடர்பில் ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுங்கத்துறைக்கு கிடைக்கும் வரி வருமானத்தில் 25வீதம் மாத்திரமே வாகன இறக்குமதி மூலம் பெறப்படுகிறது.

இந்த ஆண்டு இலக்கு சுங்க வருமானம் 1,220 பில்லியன் ரூபாவாகும்.

ஆனால், 2018ஆம் ஆண்டு, பொருளாதாரம் சாதாரணமாக இருந்தபோது, 918 பில்லியன் ரூபாய் மட்டுமே சுங்க வருவாயாக ஈட்டப்பட்டது.

இந்த ஆண்டு, 1,220 பில்லியன் ரூபாய் வருமானத்தை இலக்காகக் கொண்டு, பொருட்களின் இறக்குமதி தொடர்பில் கவனம் வெலுத்தப்படுகிறது. மேலும், இறக்குமதி வருமானம் முக்கிய வருவாய் ஆதாரமாக இருந்தது-என்றார்.

(அ)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க தயாராகி வரும் ரணில், ராஜபக்ஷ!

## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 10

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியின் மீது பேராசை கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க மற்றும் பசில் ராஜபக்ச போன்றோர் அதிகாரத்திற்காக அந்த பதவியை ஒழிக்க தயாராகி வருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தம்மிடம் இருக்கும் பொறுமதியான ஒன்றென அவர்கள் இதுவரை காலமும் நிறைவெற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை பாதுகாத்தனர் என்பதை முழு நாடும் அறியும்.

அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் அவர்களின் இறுதி துரும்புச்சீட்டு நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது.

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தை பாதுகாக்க இறுதி அஸ்திரத்தை கையில் எடுக்க தயாராகி வருகிறார்.

அதுதான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி



பதவியை ஒழிப்பது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை மட்டுமே ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் இருக்கின்றது.

எனினும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தால், பாராளுமன்ற உறுப்பினர் பதவி எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வரை இருக்கும்.

அப்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி இருக்காது.

பாராளுமன்றத்தின் அதிகாரம் 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரை அவர்களிடம் இருக்கின்றது.

அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் வீட்டுக்கு செல்லவேண்டிய சந்தர்ப்பத்தை 2025 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரை நீடித்துக்கொள்ளலாம் என ரணில் மற்றும் ராஜபக்ஷவினர் நினைக்கின்றனர்.

இவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பதாக பொய்யாக குரல் கொடுத்தனர்.

மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை பலவீனப்படுத்தும் 19 வது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்தார்.

அதன் பின்னர், அந்த பதவியை பலப்படுத்தும் 18ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வந்தார்.

இதன் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதிகாரத்தை மேலும் அதிகரிக்க 20 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் திடீரென இவர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியின் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

அதிகாரத்தை தக்கவைக்க இறுதி வரை எப்படியெல்லாம் முயற்சி செய்கின்றனர் என பாருங்கள்-என்றார்.

(அ)

# நாவிதன்வெளியில் களைகட்டிய சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு!





காரைதீவு, ஒக். 10

சம்மாந்துறை வலய நாவிதன் வெளி அன்னமலை மகா வித்தியாலய சர்வதேச ஆசிரியர் தின விழா அதிபர் திருமதி. நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

முன்னதாக நட்சத்திர அதிதியான வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளரும், பாடசாலையின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா மற்றும் அதிபர் ஆசிரியர்கள் மாலைகள் சூட்டப்பட்டு பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டார்கள்.

பின்பு மண்டபத்தில் ஆசிரியர் தின விழா பிரதி அதிபர் பி.ஜெகதீசனின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது .

அங்கு, அதிபரின் வழிகாட்டலில் உயர் தரப் பிரிவு பொறுப்பாசிரியர் ந. கோடீஸ்வரனின் நெறிப்படுத்தலில், உயர்தர கலைப் பிரிவு மாணவர்கள் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக கச்சிதமாக பலத்த கரகோஷத்துடன் மேடை ஏற்றினர்.

2022 ஆம் ஆண்டு குறைவான விடுமுறை பெற்ற திருமதி. சுவானந்தி ரூபன் ஆசிரியையும், இலட்சுமணன் பரமதேவன் ஆசிரியரும் அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் மாணவர்களை குதூகலிக்கச் செய்தன.

கூடவே ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் கொய்யா மரக்கன்றுகளை மாணவர்கள் பரிசளித்து கௌரவித்தனர். (அ)

# அதிகாலையில் யானை காரைதீவில் அட்டகாசம்!




காரைதீவு, ஒக். 10

காரைதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தினம் தினம் அதிகரித்து வருகிறது.

அறுவடையை அடுத்து நேற்று அதிகாலை புகுந்த தனியன் யானை காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையை துவம்சம் செய்தது.

சிரேஸ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகுவின் களஞ்சிய சாலையிலுள்ள நெல் மூடைகளை யானை பதம் பார்த்தது.

இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன. தென்னை வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன.

இவ்வாறு தினமும் யானை மனித மோதல் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

## மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

திருமலை, ஒக். 10

திருகோணமலை-தோப்பூர் அல்லைநகர் 06 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிலுர்தீன் அம்ஹர் எனும் 16 வயதுடைய சிறுவன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீட்டில் மின் குமிழ் ஒன்றைத் திருத்திக்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதாகவும் சம்பவ இடத்திலேயே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்று வந்தவர் எனவும் தெரியவருகிறது.

மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 8 பந்தய மோ.சைக்கிள்களை கைப்பற்றினர் பொலிஸார்!

## எட்டு பேர் கைது

திருமலை, ஒக். 10

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம்பல் தீவு பகுதியில் வீதியில் அனுமதிக்க முடியாத எட்டு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் எட்டு இளைஞர்கள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மோட்டார் சைக்கிள்கள் போட்டிக்காக கொண்டு வந்ததாகவும் இதில் ஆறு மோட்டார் சைக்கிள்களுக்கு அனுமதிப் பத்திரம் இல்லை என்பதும் அவை தடை செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எனவும் தெரியவந்தது.

குறித்த கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சுமார் 20 தொடக்கம் 25 வயதுடைய நீர்கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை மோட்டார் சைக்கிள்களுடன் திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு



அம்பாறை, ஒக். 10

தேசிய அரச சார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இம்முறை வெளியான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எஸ்.எம்.லாபீர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது உயர்தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்ற அம்பாறை மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள் 200 பேர் பெறுமதி மிக்க நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, மாணவர்களின் கலை கலாசார பாரம்பரிய அம்சங்கள் இதன்போது மேடையேற்றப்பட்டதுடன், கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் பல்வேறு கருத்துரைகளும் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எம். றஹ்மத்துல்லாஹ், எம்.எஸ். சஹுறு துல் நஜீம், எஸ்.எம்.எஸ். எம்.உமர் மௌலானா, எஸ். உதயக்குமார் உள்ளிட்ட கல்வியலாளர்கள், துறைசார் உயர் அதிகாரிகள் போன்றோர் இதன்போது அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (அ)

# ஆரையம்பதி தேவாலயத்தில் திருடப்பட்ட பொருட்கள் மீட்பு!

மட்டக்களப்பு, ஒக். 10

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மண்டபத்தை உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான உலோக குத்துவிளக்குகள் திருடப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட திருடன் தப்பிச் சென்றுள்ளபோதிலும் குத்து விளக்குகளை காத்தான்குடி பொலிஸார் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை அவற்றை மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம். எஸ்.ஏ.ரஹீம் தெரிவித்தார்.

ஆரைம்பதி பிரதான வீதியில் உள்ள தூய குழந்தை திரேசா ஆலயத்தின் மண்டபத்தை கடந்த 3ஆம் திகதி உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான குத்து விளக்குகளை திருடிச் சென்ற நபர் தப்பியோடியுள்ள நிலையில் குறித்த குத்து விளக்குகளை ஆரையம்பதி கர்பலா பிரதேசத்தில் உள்ள பற்றைக் காட்டுக்குள் இருந்து பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.



சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த குத்து விளக்குகளை திருடிய நபரை பொலிஸார் அவரை தேடி வருகின்றனர்.

மண்டபத்தின் முன் கதவை உடைத்தே திருடன் குறித்த குத்து விளக்குகளை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 3ஆவது நாளாக தொடர்ந்த இஸ்ரேல்-பலஸ்தீன யுத்தம்!

## 1500 பேர் வரை உயிரிழப்பு

ஜெருசலேம், ஒக். 10

**இஸ்ரேல் - பலஸ்தீன் இடையேயான போர் தொடங்கி நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்ற நிலையில் இரு தரப்பும் மாறி மாறி நடத்தி வரும் ஏவுகணை தாக்குதல் காரணமாக சுமார் 1500 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**மேலும், பலி எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.**

கடந்த சனிக்கிழமையன்று ஹமாஸ் போராளிகளால் தாக்கப்பட்ட இஸ்ரேலிய இசை விழா நடந்த இடத்தில் 250 க்கும் மேற்பட்ட உடல்கள் கிடைத்ததாக மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

ஒட்டுமொத்த தாக்குதல்களில் இஸ்ரேலில் குறைந்தது 700 பேர் இறந்தனர் - 2000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலியர்கள் பலர் பணயக்கைதிகளாக காஸாவில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

பாலஸ்தீன அதிகாரிகளின் சமீபத்திய தகவல்படி, இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் காசா பகுதியில் குறைந்தது 413 பேர் கொல்லப்பட்டனர் - 2300 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதங்களை அனுப்புவதன் மூலமும், பிராந்தியத்தில் படைகளை அதிகரிப்பதன் மூலமும் அதிக ஆதரவை அறிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தில் பணிபுரியும் ஒரு பிரித்தானியரின் குடும்பம், தமது உறிப்பினர் ஒருவர் தாக்குதலில் கொல்லப்பட்டதாக கூறுகிறார்கள்.

பல நாடுகள் தங்கள் சொந்த குடிமக்கள் இறந்துவிட்டதாக அல்லது கடத்தப்பட்டதாகக் அறிவித்து வருகின்றன.

ஐக்கிய நாடுகளின் தரவுகளின்படி 123,000 பலஸ்தீனியர்கள் காசாவிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதோடு 74,000 பேர் பாடசாலைகள் உள்ளிட்ட தற்காலிக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

யுத்தம் காரணமாக உலக சந்தையில் மசகெண்ணெய் விலை 4% அதிகரித்துள்ளது.

காசாவில் மின்சாரம் தடைபட்டுள்ளதால் பல வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனின் காசா, மேற்கு கரை பகுதிகளை ஆக்கிரமிக்க அந்நாட்டின் மீது பல ஆண்டுகளாக இஸ்ரேல் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இஸ்ரேல் படையினர் கடந்த சில நாட்களுக்கு முன்பு கூட காசாவுக்குள் நுழைந்து தாக்கியதாகவும், ஜெருசலேமில் உள்ள அக்சா மசூதிக்கு நுழைய முயன்றவர்களை விரட்டி அடித்ததாகவும் கூறப்படுகிறது.

பலஸ்தீன் பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் பல ஆண்டுகளாக நடத்திவரும் ஏவுகணை தாக்குதல் காரணமாக இலட்சக்கணக்கான பலஸ்தீன் மக்கள்,





பெண்கள், குழந்தைகள் கொன்று குவிக்கப்பட்டு உள்ளார்கள்.

ரமழான், பக்ரீத் ஆகிய பண்டிகை காலங்களில் புனித அக்சா மசூதிக்கு தொழுகை நடத்த செல்லும் பாலஸ்தீனர்கள் மீது பொலிஸ், இராணுவத்தை ஏவி இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதும் வழக்கம்.

பலஸ்தீன் வசம் மீதம் இருக்கும் நிலப்பகுதிகளை கைப்பற்ற இஸ்ரேல் இப்படி தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டு வரும் நிலையில், அக்சா மசூதிக்குல் பாலஸ்தீனர்கள் தொழுகை நடத்த இஸ்ரேல் தடை விதித்து இருப்பதால் பதற்ற நிலை தொடர்ந்து அதிகரித்தது.

இந்த நிலையில் ஜோர்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் கடந்த வாரம் அல் அக்சா மசூதிக்கு சென்றபோது இஸ்ரேலிய படைகள் காலணிகளுடன் நுழைந்ததாக கூறப்படுகிறது.

அதேபோல், அங்கு உள்ள இஸ்லாமிய தலைவர்களின் கல்லறைகளை பலஸ்தீன் படைகள் சேதப்படுத்தியதாகவும், இதனை கண்டித்து ஜோர்டான், பாலஸ்தீன் நாடுகள் இஸ்ரேலுக்கு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன. இந்நிலையில்தான் கடந்த சனிக்கிழமை திடீரென பாலஸ்தீனிலிருந்து இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகள் பாய்ந்து உள்ளன.

காசா பகுதியிலிருந்து இஸ்ரேலின் ஆயுத கிடங்குகள், இராணுவ மையங்கள், விமான நிலையங்களை நோக்கி 5000 க்கும் அதிகமான ஏவுகணைகள் பாய்ந்தன.

இந்த தாக்குதலுக்கு காசா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பு பொறுப்பேற்று உள்ளது. இதற்கு "ஒப்பரேசன் அல் அக்சா பிலட" என்ற பெயரில் ஹமாஸ் இந்த தாக்குதலை நடத்தி இருக்கிறது.

ஹமாஸ் அமைப்பின் இராணுவ தலைவராக இருக்கும் முஹம்மது தெய்ப், "அல் அக்சா மசூதியை இஸ்ரேல் இழிவுபடுத்தினார்கள். இஸ்லாமிய இயக்கங்கள் மீது அந்த அமைப்பு தாக்குதல் நடத்தியது.

எதிரியை நாங்கள் எச்சரித்தோம். இதற்கு பதிலடி தரும் வகையில் ஹமாஸ் இராணுவ நடவடிக்கையில் இறங்கியது. துப்பாக்கி போன்ற ஆயுதங்களை யாரெல்லாம் வைத்து உள்ளீர்களோ அவர்கள் அதை வெளியில் எடுங்கள். இது நமக்கான நேரம்." என்று அவர் அழைப்பு விடுத்தார்.

இதனை அடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவும் போர் பிரகடனத்தை அறிவித்தது. உடனடியாக இஸ்ரேல் ஏவுகணை தாக்குதலையும் நடத்தியது. (அ)



# இஸ்ரேலுக்கு ஆதரவாக களமிறங்கியது அமெ.!

## போர்க் கப்பல்களை இஸ்ரேல் கடல் எல்லைக்கு நகர்த்துகிறது

நியூயோர்க், ஒக். 10

இஸ்ரேல் மீது ஹமாஸ் பங்கரவாத அமைப்பு தாக்குதல்களை தொடுத்துள்ள நிலையில், ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேலும் கடும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதுடன், ஹமாஸ் பங்கரவாத அமைப்பு அடியோடு துடைத்தெறியப்படும் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் மீதான ஹமாஸ் அமைப்பின் பயங்கரவாத தாக்குதல்களை கண்டித்துள்ள அமெரிக்கா, இஸ்ரேலுக்கு பல்வேறு இராணுவ உதவிகளை வழங்குவதாக அறிவித்துள்ளதுடன், மத்திய தரைக்கடலில் நிலைகொண்டிருந்த அந்நாட்டின் போர்க்கப்பல்களை இஸ்ரேலின் கடல் எல்லைகளுக்கு அருகில் நகர்த்தியுள்ளது.

இந்த போர்க்கப்பல்களில் போர் விமானங்கள் மற்றும் ஜெட்கள் உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இஸ்ரேலுக்கு கூடுதல் உபகரணங்கள் மற்றும் வெடிமருந்துகளை வழங்குவதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

இரஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய விமானத் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு மேலும் இராணுவ உதவி வரும் நாட்களில் வழங்கப்படும் என்று கூறியுள்ள வெள்ளை மாளிகை, இஸ்ரேலின் எதிரிகள் இந்த சூழ்நிலையில் இருந்து ஆதாயம் தேட முயற்சிக்கக் கூடாது என்பதற்காகவும் கடுமையாக அமெரிக்கா செயல்படுவதாகவும் கூறியது.

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் அன்ரனி பிளிங்கன் கூறுகையில், "ஈரானின் நேரடி தலையீட்டிற்கான ஆதாரங்களை அமெரிக்கா கண்டறியவில்லை. ஆனால் காஸாவை தளமாகக் கொண்ட குழுவிற்கு ஈரான் பல ஆண்டுகளாக உதவி செய்து வருகிறது.

ஈரானிடம் இருந்து பல ஆண்டுகளாகப் பெற்ற ஆதரவு தான் ஹமாஸ் இவ்வாறு செயல்படுகிறது" என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேல் மீதான தாக்குதலில் ஈரான் ஈடுபடவில்லை என ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் ஈரான் கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு இடையிலான மோதலில் சுமார் 1,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதில் இஸ்ரேல் தரப்பில் மட்டும் சுமார் 600-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் இந்த இருதரப்புக்கும் இடையிலான மோதலில் ஏற்பட்ட இழப்புகளில் இது மிகவும் அதிகமாகும்.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேலை குறிவைத்து பாலஸ்தீனத்தின் ஹமாஸ் பயங்கரவாதிகள் வான்வழியில் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் விமானப்படையின் போர் விமானங்கள் மூலம் பாலஸ்தீனத்தின் காசா நகரம் மீது குண்டு மழை பொழிந்தன. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட ஹமாஸ் பயங்கரவாதிகள் உயிரிழந்ததாக இஸ்ரேல் தெரிவித்தது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, நாடு போரில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். அதன் காரணமாக காசாவில் வசிக்கும் மக்களை வெளியேறுமாறு அவர் தெரிவித்துள்ளார். இந்தியா உட்பட அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி மற்றும் உக்ரைன் நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

"நாங்கள் போரைத் தொடங்குகிறோம். ஹமாஸ் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலால் இந்த போர் மூண்டுள்ளது. இஸ்ரேல் எல்லைக்குள் ஊடுருவிய எதிரிப்படைகளை அழிக்க தொடங்கி உள்ளோம். இது இடைவிடாமல் தொடரும். இஸ்ரேல் குடிமக்களுக்கான பாதுகாப்பை மீட்டெடுப்போம். நாங்கள் வெற்றி பெறுவோம்.

காசாவில் வசிக்கும் பாலஸ்தீனியர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இப்போதே அங்கிருந்து வெளியேறுங்கள். ஏனெனில், எங்கள் படையினர் தடையின்றி செயல்பட உள்ளனர்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

(அ)

# மருந்து இறக்குமதியில் மோசடி நடந்துள்ளதா?

## இலங்கையில் பெரும் கரிசனைகளை ஏற்படுத்தியுள்ள மருந்தை தான் வழங்கவில்லை என்கிறது இந்திய நிறுவனம்

கொழும்பு, ஒக். 10

**சுகாதார அமைச்சு தற்போது பயன்பாட்டிலிருந்து நிறுத்திவைத்துள்ள இம்யுனோகுளோபலின் மருந்தினை இலங்கைக்கு தான் அனுப்பவில்லை என இந்திய நிறுவனம் மறுத்துள்ளதை தொடர்ந்து அந்த மருந்து எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்ற கேள்விகள் எழுந்துள்ளதுடன் மோசடி இடம்பெற்றதா என்ற சர்ச்சையும் எழுந்துள்ளது.**

இலங்கையில் தற்போது சுகாதார அமைச்சு பயன்பாட்டிலிருந்து நிறுத்திவைத்துள்ள இம்யுனோகுளோபலின் மருந்தினை இலங்கைக்கு வழங்கியதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய நிறுவனம் அதனை தான் வழங்கவில்லை என தெரிவித்துள்ளது.

இந்திய நிறுவனம் இலங்கையின் மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளதுடன் இந்த மருந்தினை உற்பத்தி செய்தது யார், இலங்கை இறக்குமதியாளர் யார் இந்தியாவின் எந்த துறைமுகத்திலிருந்து இந்த மருந்துகள் வந்தன? இலங்கையின் எந்த துறைமுகத்துக்கு வந்தன என்ற விவரங்களை கோரியது.

உண்மையான மருந்து ஏற்றுமதியாளர்களின் கௌரவத்தை பாதுகாப்பதற்கும் மிக முக்கியமாக விலைமதிப்பற்ற உயிர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இத்தகைய மோசடி நிறுவனங்களை இனங்கண்டு நீதியின் முன் நிறுத்தவேண்டும் என இந்தியாவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்திடம் இது குறித்து உத்தியோகபூர்வ முறைப்பாட்டை பதிவு செய்யப்போவதாக தெரிவித்துள்ள இந்திய நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# பயணிகளை ஏற்றுவதில் போட்டி; இரு பஸ்கள் மோதி 6 பேர் காயம்!

கொழும்பு, ஒக். 10

ஹொரணை, பல்லாபிட்டிய பிரதேசத்தில் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 6 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹொரண தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்த அதே நேரத்தில் விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி ஒருவரை பயணிகளும் பிரதேச மக்களும் தாக்கியதையடுத்து பொலிஸார் தலையிட்டு சாரதியை பெரும் பிரயத்தனத்தின் பின்னர் மீட்டு கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்கு பஸ்ஸில் பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டித்தன்மையே காரணம் எனக் கூறப்படுகிறது. (அ)

# 4 பிள்ளைகளின் தந்தை மாயம்!

வவுனியா, ஒக். 10

வவுனியா சிதம்பரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகனூர் கிராமத்தில் வசித்து வரும் அன்டன் ஜோன்சன் என்பவரை கடந்த 04 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என தெரிவித்து அவரின் மனைவியினால் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த குறித்த நபர் கடந்த 04 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் நேற்று வரை வீடு திரும்பவில்லை.

இதனை அடுத்து அவரின் மனைவியினால் கணவரை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வீட்டிலிருந்து அவர் வெளியேறுகையில் நீலநிறம் சாரம் மற்றும் ரோஸ் கலர் சட்டையும் அணிந்து சென்றிருந்தார் என கூறப்பட்டது. (அ)

# மிளகாய் பொடி தூவி 45 இலட்சம் கொள்ளை

கொழும்பு, ஒக். 10

மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் தனது வியாபாரத்தை முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த வர்த்தகர் ஒருவரை மிளகாய்ப் பொடியால் தாக்கி அவரிடமிருந்து சுமார் 45 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகர் நேற்று அதிகாலை காலை வர்த்தக இடத்தை மூடிவிட்டு தனது முச்சக்கர வண்டியில் மற்றுமொரு ஊழியரை அழைத்துக்கொண்டு மீகொடதம்ம மாவத்தை பகுதியில் உள்ள அவரது வீட்டுக்கு செல்லும் வழியில் மெகொட சிறிரத்தன மாவத்தையில், முச்சக்கரவண்டியில் வந்த ஒருவர் மிளகாய்ப் பொடியை வர்த்தகர் முகத்தில் தூவிவிட்டு அவரிடமிருந்த பணப் பொதியுடன் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இஸ்ரேலில் உள்ள உறவினர்கள் குறித்து தகவல் அறிவதற்கு 1989ஐ அழையுங்கள்

கொழும்பு, ஒக். 10

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மோதல் காரணமாக இஸ்ரேல் நாட்டில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டு வரும் இங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அந்நாட்டு தூதரகத்துடன் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி செனரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இஸ்ரேலில் இலங்கையர்கள் தொழில் செய்யும் இடங்களில் ஏதேனும் பிரச்னை இருக்குமானால் அவர்கள் 0094716640560 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல் வழங்குமாறு தெரிவித்திருக்கிறோம். அவ்வாறு அவர்களுக்கு ஏதேனும் தேவை என தகவல் வழங்கினால் அது தொடர்பில் தூதுவராலயம் ஊடாக நடவடிக்கை எடுப்போம்.

மேலும் இலங்கையர்களின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கென் தூதரகத்தில் 2அதிகாரிகள் முழுநேர கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அதே நேரம் இஸ்ரேலில் இருக்கும் உங்கள் உறவினர்கள் தொடர்பாக எந்த தகவலும் வழமைப் போன்று கிடைக்கவில்லை என்றால், அது தொடர்பில் 1989 என் எமது துரித இலக்கத்துக்கு தகவல் வழங்கினால் தூதரகம் ஊடாக அது தொடர்பான தகவல்களை கேட்டறிந்து அறிவிப்போம் எனவும் பிரதி பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ)

# கோப்பாய் கலாசாலை நூற்றாண்டையொட்டி கல்விசார் ஆய்வு மாநாடு சிறப்புற நடந்தது






யாழ்ப்பாணம், ஒக். 10

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கல்விசார் ஆய்வு மாநாடு நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் வரை இடம்பெற்றது. கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர் பொன் இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாநாட்டின் தொடக்க நிகழ்வு பொது அரங்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வு மாநாட்டின் சிறப்புரையை ஆற்றினார். வெற்றி பெறுவதில் மனப்பாங்கின் வகிபாகம் என்ற பொருளில் அவரது உரை அமைந்தது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரையையும் விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அரங்க அழைப்பாளர் உரையை வழங்கினார்.

ஆய்வுக்கட்டுரை அளிக்கைகளின் முதல் அமர்வு கலாசாலைக்கென காணியை வழங்கிய சேர் பொன் இராமநாதன் அரங்காக - யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் தலைமையில் நடைபெற்றது. கோப்பாயில் ஆசிரிய கலாசாலையை நிறுவதற்கு அடித்தளமிட்ட காரைநகர் ச. அருணாசலம் உபாத்தியாயர் பெயரில் இரண்டாவது அரங்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் அருணாசலம் உபாத்தியாயர் குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக, தேசிய கல்விநிறுவக, கலாசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு மாநாட்டு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (அ)

### ஜனாதிபதி...

இதற்கு தயாராகிறது. இது விஷம் கலந்த கேக் துண்டு. இவற்றுக்கு இந்நாட்டு மக்கள் ஏமாறமாட்டார்கள்.

மக்கள் ஆணை இல்லாத ஆட்சியாளர்களுக்கு மக்களின் ஆசீர்வாதம் எந்த வகையிலும் கிடைக்கப்பெறாது. சந்தர்ப்பவாதமாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்கள், மக்களின் ஆணையையோ அல்லது விருப்பத்தையோ கருத்தில் கொள்ளாது, பல்வேறு அரசியல் தந்திரங்களைப் பயன்படுத்திக் கொண்டு தனது ஆளுகை செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியின் முடிவு ஆபத்தானது என்பது முழு உலகமும் உணரக்கூடிய உண்மையாகும்.

தேர்தல்கள் பிற்போடப்படுவதன் இந்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்கு கொண்டு செல்லவா தற்போதைய அரசாங்கம் தயாராகி வருகின்றது என நாம் கேள்வி எழுப்புகின்றோம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம், நடத்தப்பட வேண்டிய தேர்தலை ஒத்திவைப்பதும், நடத்தாமல் இருப்பதும் ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் மீதான கடுமையான தாக்குதல் என்பது இரகசியமான விடயமல்ல.

தேர்தல் ஒத்திவைக்கப்படாது, ஒத்திவைக்கப்பட தேர்தலொன்று இல்லை" என மக்கள் இறைமையுள்ள பாராளுமன்றத்தில் வைத்து கேலிக்கையாகவும், ஏளனமாகவும், அவமதிக்கும் விதமாகவும் பேசிய ஜனாதிபதியைக் கொண்ட அரசாங்கத்திலிருந்து தேர்தலை எதிர்பார்ப்பது வெறும் கனவுதான் என்றாலும், இந்த ஒருதலைபட்ச செயல்முறைக்கு எதிராக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஜனநாயகத்தையும் மக்கள் இறையாண்மையையும் நசுக்க எடுக்கும் சர்வாதிகார மற்றும் ஜனநாயக விரோத அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும் - என்றார். (அ)

### உயர் நீதிமன்றின்...

நீதித்துறை மீது கை வைக்காதே என்று கோரி நேற்று திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு உயர்நீதிமன்ற முன்றலில் குறித்த போராட்டம் சட்டத்தரணிகளால் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பெருமளவிலான சட்டத்தரணிகளும் இலங்கையின் ஏனைய மாகாணங்களை சேர்ந்த சட்டத்தரணிகளும் ஜனாதிபதி சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு நீதிபதி டி.சரவணராஜா தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறி தமது பதவியை அண்மையில் இராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரி வடக்கு-கிழக்கில் ஒருநாள் பூரண ஹர்த்தாலை அமுல்படுத்துவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகள் தீர்மானம் மேற்கொண்டிருந்தன.

இந்நிலையில் நேற்று உயர்நீதிமன்றத்தின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்ச் சட்டத்தரணிகளுடன் இணைந்து சிங்கள மற்றும் முஸ்லிம் சட்டத்தரணிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (அ)

### வடக்கு, கிழக்கில்...

இன ஒடுக்குமுறைக்குள்ளாகுவதை கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் யாழ். தந்தை செல்வா அரங்கில் நேற்று நடைபெற்றபோதே எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. (அ)

### நாட்டின்...

தான் எங்களுடைய வழமையான எதிர்ப்பு முறையைக் கைவிட்டு வீதிக்கு இறங்கி இன்று உயர்நீதிமன்றத்திற்கு முன்பாகவும், நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு முன்பாகவும் ஒன்று திரண்டு இந்த கோஷத்தை எழுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

நீதிச் சேவைக்கு தொடர்ச்சியாக ஓர் அச்சுறுத்தல் இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இது இப்போது ஓர் உச்ச நிலையை அடைந்திருக்கின்றது. ஆகையால் உடனடியாக இதற்கு ஒரு மாற்று வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

இந்த நிலை திருத்தப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் சட்டத்தின் ஆட்சி என்பது இந்த நாட்டில் முன்னொரு காலத்திலே இருந்தது என்ற சரித்திரமாக மட்டும் இருக்குமே தவிர, சட்டத்தின் ஆட்சி என்றால் என்னவென்று கேட்கும் ஒரு சூழ்நிலை வந்துவிடும்.

ஆகையால் இது சம்பந்தமாக உடனடியாக ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எங்களுடைய கோஷமாக இருக்கின்றது-என்றார். (அ)

### மின்சாரம்...

- தோப்பு பகுதியைச் சேர்ந்த கிட்டுனன் லோகநாதன் (வயது 39) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த குடும்பஸ்தர் ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிக்கொண்டு இருந்தவேளை, இன்னொருவர் அதனை கழுவுவதற்காக நீர் பாய்ச்சிக்கொண்டு இருந்தார். இதன்போது திடீரென நீருடன் மின்சாரமும் இணைந்து பாய்ச்சப்பட்டதால் அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இந்நிலையில் அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

### வட மாகாண...

போராட்டத்தைத் தொடர்ந்து, இதுவரை நீதிமன்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட வடக்கு சட்டத்தரணிகள் அனைவரும் இன்று முதல் பணிக்கு திரும்ப தீர்மானித்துள்ளதாக யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பா.தவபாலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் இன்று முதல் வழக்கம் போல இயங்கும் என்றார் அவர். (அ)

### வாகனங்கள்...

கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி மீதான தடை கடந்த ஆண்டு நவம்பர் வரை தொடர்ந்தது. அதன் பின்னர் பல பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை மெல்ல மெல்ல தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இந்நிலையில் பல பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதிலும், வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நீடிக்கிறது. (அ)

### பருத்தித்துறை...

வீழ்ந்துள்ளார். அவ்வேளை அருகிலிருந்த பொலிஸ் அதிகாரி காலுக்கு கீழ் துப்பாக்கிச் சூடு நடத்தி காயம் ஏற்படுத்தி சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபரை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு விடுதிக்கு மாற்றப்பட்டார்.

குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## கறுப்புத் துணியால் வாயைக் கட்டி நேற்று முல்லைத்தீவில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு, ஒக். 10

முல்லைத்தீவில் நேற்று நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி கண்டனப் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு இளைஞர்களின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கறுப்புத் துணியால் வாயைக் கட்டிவாறு அமைதியாக மேற்கொள்ளப்பட்ட இப் போராட்டத்தைத் தொடர்ந்து, மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரனிடம் நீதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்காக மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது, முல்லைத்தீவில் திட்டமிட்டு நடத்தப்படும் அத்துமீறிய குடியேற்றங்களுக்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இப் போராட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மதகுருமார், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜெகதீஸ்வரன், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்புள்ள சிறந்த தலைவர்

### கோட்டாபய புகழாரம்

கொழும்பு, ஒக். 10

"இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை அடியோடு நிராகரித்து - சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதி இல்லை என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பாராட்டுகின்றேன்."

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகியபோது புதிய ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பரிந்துரைத்திருந்தேன். அதற்கமைய பாராளுமன்றம் அவரைப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்பதை அவர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துக் காட்டி வருகின்றார். இலங்கை இறைமையுள்ள நாடு. இங்கு வெளிசக்திகளின் தலையீடுகளுக்கு இடமில்லை. நாடாளுமன்றத்தை மீறி எவரும் முடிவுகளை எடுக்க முடியாது. நாடாளுமன்றத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். உண்மையில் அவர் சிறந்த தலைவர்." - என்றார். (அ)

## ஆபத்தான நிலையில் காணப்படும் மேம்பாலங்கள் குறித்து ஆராய்வு!

கொழும்பு, ஒக். 10

கொழும்பு - வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி ஆகிய ரயில் நிலையங்களுக்கு பிரவேசிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பாலங்கள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீடு இடம்பெறுவதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த இரு மேம்பாலங்களும் ஆபத்தான நிலையில் உள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பகிறது.

இதன்படி, குறித்த பிரதேசத்திற்கு தமது நிறுவனத்தின் குழுவொன்று அனுப்பிவைக்கப்படுமென தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் தம்மிகா கஹஹேங்கோட தெரிவித்தார்.

ஆபத்தான நிலையில் உள்ள வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி மேம்பாலங்கள் தொடர்பில் கொழும்பு மாநகரசபை மற்றும் இரயில்வே திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த இரு நிறுவனங்களுக்கும் தேவை ஏற்படும் பட்சத்தில் தொழில்நுற்ப உதவிகளை வழங்குவதாகவும் தம்மிகா கஹஹேங்கோட தெரிவித்தார்.

இருப்பினும் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படாததன் காரணமாக, இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று அனுப்பிவைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஆபத்தான நிலையில் உள்ள வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி மேம்பாலங்கள் தொடர்பான தொழில்நுற்ப அறிக்கையினை வெளியிடுவதற்கும் நம்பிக்கை கொண்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் தம்மிகா கஹஹேங்கோட தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# தென்பகுதியில் நடந்த வன்முறைகளின் பின்னணியில் கோட்டாவின் குழுக்கள்!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு




கொழும்பு, ஒக். 10

இலங்கையின் தென் பகுதிகளில் நடக்கும் சில வன்முறை சம்பவங்களின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் வழிநடத்தப்பட்ட குழுக்கள் உள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வன்முறைகள் தொடர்பான பொதுவாக இராணுவ புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தக்கூடாது.

நான் இராணுவ தளபதியாக பணியாற்றிய காலத்தில் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளுக்கு நான் நேரடியாக உத்தரவுகளை பிறப்பிக்கவில்லை.

அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவுகளை பிறப்பித்தார். கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகளுக்கு கோட்டாபய மற்றும் அவருடன் இருந்தவர்களே பொறுப்பாக இருந்தனர்.

இதன் காரணமாகவே அப்போது கொழும்பில் நடந்த சில குற்றச் செயல்கள் தொடர்பில் நான் கோட்டாபய மீது குற்றம் சுமத்தினேன்.

கோட்டாபய, கபில ஹெந்தவிதாரண போன்றோர் வழிநடத்திய குழுவில் தற்போதைய அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயும் உள்ளடங்கியிருந்தார்-என்றார். (அ)

# ஓ.எல். பரீட்சை திகதி மீண்டும் ஒத்திவைப்பு



கொழும்பு, ஒக். 10

இந்த வருடம் டிசெம்பரில் நடத்தப்படவிருந்த கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் மே மாதம் ஆரம்பத்தில் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சரியான திகதியை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டதை கருத்திற்கொண்டு, சாதாரண தரப் பரீட்சைகள் மே மாதம் வரை ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் வழமை போன்று திட்டமிடப்பட்ட திகதிகளில் நடைபெறும் என்றும் அவர் கூறினார். (அ)

# மனித உரிமை பேரவையின் அமர்வில் உரையாற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கு வாய்ப்பு மறுப்பு



கொழும்பு, ஒக். 10

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் கலந்துகொள்ள ஜெனிவா சென்றிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முக்கிய கூட்டங்களில் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பிலேயே நளின் பண்டார எம்.பி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனித உரிமைகள் பேரவையில் அமர்வுகளில் கலந்து கொள்ள அண்மையில் ஜெனிவாவிற்கு விஜயம் செய்த எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமர்வில் பேசும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

பொதுவாக ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்பும் ஒருவருக்கு மனித உரிமை பேரவை அமர்வுகளில் பேசுவதற்கு ஒன்றரை நிமிடங்கள் வழங்கப்படும். எமது கட்சியின் எம்.பியான ஹெக்டர் அப்புஹாமிக்கு அமர்வில் பேச 45ஆவது இடம் வழங்கப்பட்டது.

ஆனால், நாள் முடிவில் அவர் அமர்வில் பேச அவருக்கு நேரம் வழங்கப்படவில்லை. இந்த விவகாரத்தை விரைவில் மனித உரிமைகள் பேரவைக்கு எடுத்துச் செல்ல உள்ளோம்.

அப்புஹாமி எம்.பி., ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பற்றிய விவகாரம் தொடர்பில் இந்த அமர்வில் பேசுவதற்கு திட்டமிட்டிருந்தார். ஆனால், அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்காது போய்விட்டது.

என்றாலும் பல்வேறு இணை அமர்வுகளில் அவரால் பேச முடிந்தது. ஐ.நா அதிகாரிகளுக்கு எங்கள் சித்தாந்தங்களை கடத்தவும் முடிந்தது-என்றார். (அ)

# ஓட்டோ உரிமையாளர்கள் நாளை யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணத்தில் நாளை ஓட்டோ உரிமையாளர்கள் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாளை புதன்கிழமை காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் பேரணி யாழ். நகரில் உள்ள வீதி வழியாக சென்று கடற்தொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளதாக ஓட்டோச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

குறிப்பாக அண்மைய நாட்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புதிய செயலி மூலம் ஓட்டோ சேவையை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக நீண்ட காலமாக ஓட்டோவை தமது வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்படுபவர்பவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த போராட்டம் ஓட்டோ உரிமையாளர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயார்!

## தம்மிக்க பெரேரா கூறுகிறார்

கொழும்பு, ஒக். 10

51 வீத வாக்குகளைப் பெற முடியும் என அரசியல் கட்சிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்குமாயின், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயாரென பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அதனை உறுதிசெய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 55 இலட்சம் குடும்பங்களில் 11 இலட்சம் குடும்பங்களிலுள்ள 15 இலட்சம் பிள்ளைகள் தமால் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தினூடாக பயனடைவதாக தம்மிக்க பெரேரா இதன்போது சுட்டிக்காட்டினார்.

# கடந்த வாரம் மட்டும் 198 பேருக்கு டெங்கு!



கொழும்பு, ஒக். 10

நாட்டில் கடந்த வாரத்தில் மாத்திரம் 198 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 7 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் அதி அவதானம் மிக்க பகுதிகளாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 754 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வருடத்தில் 65ஆயிரத்து 247 பேர் இதுவரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 38 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மேல் மாகாணத்திலேயே அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கொழும்பில் 13ஆயிரத்து 704 பேரும், கம்பஹாவில் 13 ஆயிரத்து 500 பேரும் , களுத்துறையில் 4247 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மொத்த எண்ணிக்கையில் 48.2 வீதமாக 31 ஆயிரத்து 451 பேர் வரையில் பதிவாகியுள்ளது.

இதேவேளை மத்திய மாகாணத்தில் ஏழாயிரத்து 205 பேரும், வடமேல் மாகாணத்தில் ஐயாயிரத்து 391 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் ஐயாயிரத்து 427 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் இவ்வருடத்தில் கடந்த 9 மாதங்களுடன் ஒப்பிடுகையில் இம்மாதத்தில் குறைந்தளவான டெங்கு நோயாளர்களே பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உலகக் கிண்ணத் தொடர்:

# இந்தியாவுக்கு இலகு வெற்றி




சென்னை, ஒக். 10

அவுஸ்திரேலிய அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது இந்திய அணி.

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியை எதிர்கொண்டது.

சென்னையில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 49.3 ஓவர்களில் 199 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. தொடக்க வீரரான மிட்செல் மார்ஷ் ஓட்டம் ஏதும் எடுக்காத நிலையில் ஜஸ்பிரித் பும்ராவின் பந்தில் விராட் கோலியின் அற்புதமான பிடியெடுப்பால் வெளியேறினார். 2ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்ணருடன் இணைந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். இந்த இணையால் பெரிய அளவில் ஓட்டங்களை சேர்க்க முடியவில்லை. வோர்ணர் 52 பந்துகளில், 6 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் குல்தீப் யாதவ் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஸ்டீவ் ஸ்மித் 71 பந்துகளில் 5 பௌண்ட்ரிகளுடன் 46 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜாவின் பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் மார்னஷ் லபுஷான் 27, அலெக்ஸ் கேரி 0, கமரூன் கிரீன் 8, பட் கம்மின்ஸ் 15, அடம் ஷம்பா 6, மிற்செல் ஸ்ரார்க் 28 ஓட்டங்களில் நடையை கட்டினர். ஒரு கட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 110 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து வலுவாகவே இருந்தது. ஆனால், அங்கிருந்து மேற்கொண்டு 30 ஓட்டங்களை சேர்ப்பதற்குள் 5 விக்கெட்களை கொத்தாக தாரை வார்த்தது. இறுதிக்கட்டத்தில் பட் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டார்க் ஆகியோரின் பங்களிப்பால் அவுஸ்திரேலிய அணியால் 199 ஓட்டங்கள் வரை சேர்க்க முடிந்தது.

இந்திய அணி சார்பில் ஜடேஜா 3, குல்தீப் யாதவ், ஜஸ்பிரீத் பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், மொகது சிராஜ், ரவிச்சந்திரன் அஸ்வின், ஹர்திக் பாண்ட்யா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

200 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தொடக்கம் அதிர்ச்சியாக இருந்தது. மிற்செல் ஸ்டார்க் வீசிய முதல் ஓவரில் இஷான் கிஷன் (0) ஆட்டமிழந்தார். ஜோஷ் ஹஸில்வூட் வீசிய அடுத்த ஓவரில் ரோஹித் சர்மா (0), ஸ்ரேயாஸ் ஐயர் (0) ஆகியோர் ஆட்டமிழக்க மைதானமே அதிர்ச்சியில் உறைந்தது.

2 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்த நிலையில் விராட் கோலி, கே. எல். ராகுல் ஜோடி நிதானமாக விளையாடியது. விராட் கோலி 12 ஓட்டங்களில் இருந்த போது ஜோஸ் ஹஸில்வூட் வீசிய குறுகிய பந்தை விளாச முயன்றார். ஆனால், பந்து மட்டை விளிம்பில்பட்டு உயரமாக சென்றது. நடுவிக்கெட் திசையில் இருந்து ஓடி வந்து பிடிக்க முயன்ற மிட்செல் மார்ஷ் தவறவிட்டார். இந்த வாய்ப்பை விராட் கோலி பயன்படுத்திக் கொண்டார்.

நிதானமாக விளையாடிய விராட் கோலி 75 பந்துகளில், 3 பௌண்ட்ரிகளுடன் தனது 67ஆவது அரைச்சதத்தை கடந்தார். அதேவேளையில் கே. எல். ராகுல் 72 பந்துகளில், 5 பௌண்ட்ரிகளுடன் தனது 16ஆவது அரைச்சதம் அடித்தார். இந்த ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால் இந்திய அணி வெற்றிக் கோட்டை நெருங்கியது. சிறப்பாக விளையாடி வந்த விராட் கோலி 116 பந்துகளில், 6 பௌண்ட்ரிகளுடன் 85 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜோஷ் ஹஸில்வூட் பந்தில், லபுஷானிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதையடுத்து களமிறங்கிய ஹர்திக் பாண்ட்யா,ஜோஷ் ஹஸில்வூட் வீசிய பந்தில் சிக்ஸர் விளாசினார். மக்ஸ்வெல் வீசிய 41ஆவது ஓவரில் முதலிரு பந்துகளையும் சிக்ஸருக்கும், பௌண்ட்ரிக்கும் விரட்டினார் கே. எல். ராகுல். பட் கம்மின்ஸ் வீசிய அடுத்த ஓவரில் கே. எல். ராகுல் கவர் திசையை நோக்கி சிக்ஸருக்கு விளாச இந்திய அணி 41.2 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 201 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கே. எல். ராகுல் 115 பந்துகளில், 8 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 97 ஓட்டங்களும், ஹார்திக் பாண்டியா 11 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி முழுமையாக 2 புள்ளிகளை பெற்றது. (ஐ)

# சீன ஓப்பன் ரென்னிஸ் ஸ்வியாரெக் சம்பியன்

பீஜிங், ஒக். 10

சீனாவில் நடைபெற்ற சீனா ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில், உலகின் நம்பர் 2 வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிச்சுற்றில் அவர், 6-2, 6-2 என்ற நேர் செற்களில் ரஷ்யாவின் லுட்மிலா சாம்சனோவாவை தோற்கடித்து வாகை சூடினார். இந்தப் போட்டியில் இவர் 2019இற்கு பிறகு வாகை சூடியது இதுவே முதல் முறையாகும். கடந்த மாதம் மட்றிட் ரென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் சபலென்காவிடம் தோல்வி கண்டு உலகின் முதல் நிலை இழந்த ஸ்வியாரெக் தற்போது முதலிடத்துக்கு முன்னேற வாய்ப்பை அதிகரித்துள்ளது.




இதிலேயே, மகளிர்இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில், செக் குடியரசின் மேரி புஸ்கோவாஸ்பெயினின் சாரா சொரைப்ஸ் ஆகியோர் கூட்டணி 3-6, 6-0, 10-4 என்ற செற்களில் மெக்சிக்கோவின் கிலியானா ஒல்மோஸ் , தாய்வானின் சான் ஹாவ் சிங் இணையை வீழ்த்தி கிண்ணம் வென்றது. (ஐ)

# இலங்கை - பாகிஸ்தான் இன்று மோதுகின்றன!

ஹைதராபாத், ஒக். 10

நெதர்லாந்துக்கு எதிராக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இன்று நடைபெறும் போட்டியில் பாகிஸ்தான் அணி இலங்கையை எதிர்கொள்கிறது.

உலகக் கிண்ணத் தொடரில் நெதர்லாந்துக்கு எதிராக தனது முதல் போட்டியில் பாகிஸ்தான் விளையாடியது. அந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நெதர்லாந்துக்கு எதிராக வெற்றி பெற்ற போதிலும், பாகிஸ்தான் அணி நெதர்லாந்தின் பந்துவீச்சில் சற்று தடுமாறியது.

இந்த நிலையில், பாகிஸ்தான் அணி இன்று இலங்கையை எதிர்த்து விளையாடவுள்ளது. இலங்கை அணி தனது முதல் போட்டியில் தென்னாபிரிக்காவிடம் 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

வெற்றிக் கணக்கைத் தொடங்கும் முனைப்பில் இலங்கை அணியும், வலுவான வெற்றியை பதிவு செய்யும் முனைப்பில் பாகிஸ்தான் அணியும் களம் காணவுள்ளன. பாகிஸ்தான் வழக்கமாக சுழல் பந்துவீச்சாளர்களுக்கு எதிராக சிறப்பாக விளையாடுவார்கள். ஆனால், பாபர் தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கு துனித் வெல்லாலகே சவால் அளிக்கும் விதமாக செயல்படுவார் எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையான போட்டி இன்று ஹைதாராபாத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.




# டோனியின் சாதனையை முறியடித்த ராகுல்!

சென்னை, ஒக். 10

உலகக் கிண்ணத் தொடரின் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இந்திய அணியின் சிறப்பான பந்துவீச்சில் 199 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அழுத்தமான சூழலில் விராட் கோலி (85) மற்றும் கே.எல். ராகுலின் (97) அசைக்க முடியாத இணைப்பாட்டத்தால் இந்திய அணி அவுஸ்திரேலியாவை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

கே.எல்.ராகுல் 97 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு வித்திட்டார். மேலும், ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் இந்திய விக்கெட் காப்பாளர்களில் அதிகபட்ச ஓட்டங்கள் அடித்தவர் பட்டியலில் முன்னாள் தலைவர் எம். எஸ். டோனியை சாதனையை கே. எல். ராகுல் முறியடித்துள்ளார். ஆனால், இந்தப் பட்டியலில் ராகுல் டிராவிட் முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் இந்திய விக்கெட் காப்பாளர்களில் அதிகபட்ச ஓட்டங்கள் அடித்தவர் பட்டியல்:

ராகுல் டிராவிட் -145 (இலங்கைக்கு எதிராக), கே. எல். ராகுல் - 97 (ஆஸி.க்கு எதிராக), எம். எஸ். டோனி - 91 (இலங்கைக்கு எதிராக)

# மாலைத்தீவு: சீனாவுடன் நெருக்கம், இந்தியாவை வெளியேற்ற துடிக்கும் மாலைதீவு புதிய அதிபர் முகமது முய்சு

இந்தியப் படைகளை மாலத்தீவில் இருந்து அகற்றுவதில் தாம் உறுதியாக இருப்பதாக, அந்நாட்டில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள அதிபர் முகமது முய்சு சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவு மோசமடையுமா என்ற கவலைகள் எழுந்துள்ளன. அதைவிட, மாலத்தீவில் சீனாவின் ஆதிக்கம் வலுப்படுமா என்ற அச்சங்களும் எழுந்துள்ளன.

இந்நிலையில் மாலத்தீவின் புதிய அரசாங்கத்துடன் எல்லா பிரச்னைகளையும் பேசித் தீர்ப்பதற்கு இந்தியா ஆர்வமாக இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



கடந்த வியாழக்கிழமையன்று இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்ஷியிடம் மாலைதீவு புதிய அதிபர் முகமது முய்சுவின் அறிக்கை குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அரிந்தம் பக்ஷி, புதன்கிழமை மாலை, மாலத்தீவுக்கான இந்திய தூதர் முனு மஹவர் முகமது, அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முய்சுவை சந்தித்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை அளித்ததாகக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், “அப்போது, பல விஷயங்களில் இருவருக்கும் இடையே நல்ல உரையாடல் நிகழ்ந்தது. பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பான விஷயங்களும் அந்த உரையாடலில் இடம் பெற்றன,” என்றார்.

இந்த நெருக்கடிக்கு மத்தியில், சீன போர்க்கப்பல்கள் மாலத்தீவு நோக்கி நகர்ந்ததாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது. சுந்தா மற்றூம் லாம்போக் ஜலசந்தி வழியாக சீன போர்க்கப்பல்கள் நகர்வதை இந்திய கடற்படையும் உறுதி செய்துள்ளது.

ஆனால், முகமது முய்சுவின் பதவியேற்பு விழாவில் இந்தியாவின் சார்பில் யார் கலந்து கொள்வார்கள் என்பதை இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவிக்கவில்லை.

கடந்த 2018ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அப்போதைய மாலத்தீவு அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்ராகிம் சோலியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டார். அது இந்தியாவின் எதிர்பாராத நிலைப்பாடாகப் பார்க்கப்பட்டது.

### சீனாவுக்கு சாதகமானதாகப் பார்க்கப்படும் முய்சுவின் வெற்றி

கடந்த வாரம்தான், மாலத்தீவின் தலைநகரான மாலேவின் மேயராக இருந்த முகமது முய்சு 19,000 வாக்குகள் வித்தியாசத்தில் அதிபர் இப்ராஹிம் சோலியை தோற்கடித்தார்.

இருவருக்கும் இடையே 8 வீத வாக்கு வித்தியாசம் மட்டுமே இருந்தது. மாலத்தீவின் இந்தத் தேர்தல் முடிவு இந்தியாவுக்கு எதிரானதாகவும், சீனாவுக்கு சாதகமானதாகவும் பார்க்கப்பட்டது.

இப்ராஹிம் சோலியின் அரசாங்கத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்பு மிகவும் ஆழமானது. இந்தியாவின் நலன்களுக்கு எதிராக செல்லாத அதிபராக அவர் பார்க்கப்பட்டார்.

ஆனால், முய்சுவின் தேர்தல் பிரசாரத்தில் இந்தியா ஒரு முக்கியமான பிரச்னையாக இருந்தது. அவர், “இந்தியாவே வெளியேறு’ என்ற பிரசாரத்தைத் துவங்கினார். மாலத்தீவின் இறையாண்மையை சமரசம் செய்வதன் மூலம் தனது அரசாங்கம் எந்த நாட்டையும் நெருங்காது என்றும் முய்சு கூறியிருந்தார்.

கடந்த செவ்வாயன்று, முய்சுவின் மற்றொரு அறிக்கை மாலத்தீவு ஊடகங்களில் தலைப்புச் செய்திகளில் வெளியானது.

அதில் அவர், மாலத்தீவில் இந்திய ராணுவ வீரர்கள் இருப்பதை மக்கள் விரும்பவில்லை. வெளிநாட்டுப்



படைகள் மாலத்தீவு மண்ணை விட்டு வெளியேற வேண்டும், என்று கூறியிருந்தார்.

தி ஹிந்து நாளிதழில் வெளிவந்த ஓர் அறிக்கையில், இந்தியப் பெருங்கடலில் இந்திய ராணுவம் இருப்பது புதிய விஷயம் அல்ல. 2013 முதல் அப்து மற்றும் லம்மு தீவுகளில் இந்திய கடற்படை மற்றும் விமானப் படை வீரர்கள் உள்ளனர், என்று கூறியிருந்தது.

அந்த அறிக்கை, மேலும், நவம்பர் 2021இல், மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படை, மாலத்தீவில் மொத்தம் 75 இந்திய ராணுவ வீரர்கள் இருப்பதாக நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்தது. பிப்ரவரி 2021இல், மாலத்தீவின் எதிர்க்கட்சிகள் இந்தியாவுடனான கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தத்தை எதிர்த்தன, என்று கூறியிருந்தது.

“மாலத்தீவுக்கு இந்தியா இரண்டு ஹெலிகாப்டர்களை வழங்கியது, இது தொடர்பாகவும் சர்ச்சை எழுந்



தது. 2018ஆம் ஆண்டில், அப்துல்லா யாமீனின் அரசாங்கம் இந்தியாவிடமிருந்து பரிசாகப் பெற்ற இரண்டு கடற்படை ஹெலிகாப்டர்களை திரும்பப் பெறச் சொன்னது. இந்த ஹெலிகாப்டர்களை மாலத்தீவுக்கு நிவாரணப் பணிகளுக்காக இந்தியா வழங்கியிருந்தது,” என்று தெரிவித்திருந்தது.

மாலத்தீவில் இருந்து இந்தியப் படைகள் அகற்றப்படும் என்று முகமது முய்சு கூறியது குறித்து அரிந்தம் பக்சி தெளிவாக எதுவும் கூறவில்லை. அவர், “மாலத்தீவுடனான இந்தியாவின் பரஸ்பர நெருக்கம், பொதுவான சவால்கள் மற்றும் முன்னுரிமைகளில் உள்ளது. அண்டை வீட்டாராகிய நாம் ஒன்றாகச் செயல்படுவது முக்கியம்,” என்றார்.

### மாலத்தீவில் இந்தியாவின் இருப்பு

மாலத்தீவின் சமூகத்திலும் கலாசாரத்திலிம் இந்தியாவின் தாக்கம் மிக நீண்டது.

இந்தியத் திரைப்படங்கள், ஆடைகள், மற்றும் உணவு வகைகள் மாலத்தீவில் மிகவும் பிரசித்தம். திருவனந்தபுரம் மாலத்தீவின் தலைநகரான மாலேவுக்கு அருகில் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் பல்லாயிரக்கணக்கான மாலத்தீவு குடிமக்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள், குறிப்பாக மருத்துவச் சிகிச்சைக்காக.

ஒரு தீவுக் குழுவால் உருவான இந்தச் சிறிய நாட்டின் பாதுகாப்பில் இந்தியா முக்கியப் பங்காற்றியுள்ளது. 1988இல் ராஜீவ் காந்தி ராணுவத்தை அனுப்பி மௌமூன் அப்துல் கயூமின் அரசைக் காப்பாற்றினார். கடந்த 2018ஆம் ஆண்டு மாலத்தீவு மக்கள் குடிநீர் பிரச்னையை எதிர்கொண்டபோது, பிரதமர் மோதி குடிநீர் அனுப்பி வைத்தார்.

இதற்குப் பிறகு இந்திய அரசு மாலத்தீவை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காகப் பலமுறை கடன் கொடுத்தது.

### நெருக்கடியின் ஆரம்பம்

இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவுகள் 2018இல் மிகவும் கசப்பாக இருந்தன. இது 2018ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி மாலத்தீவின் உச்ச நீதிமன்



றத் தீர்ப்புடன் துவங்கியது.

அதிபர் அப்துல்லா யாமீன் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சிறையில் அடைத்ததன் மூலம் அரசியல் சாசனம் மற்றும் சர்வதேச விதிகளை மீறியதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

முன்னாள் அதிபர் முகமது நஷீத் உட்பட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் விடுவிக்கும் படியும் நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஏற்க அதிபர் அப்துல்லா யாமீன் மறுத்துவிட்டார்.

இதையடுத்து யாமீன் நாட்டில் அவசரநிலையைப் பிரகடனம் செய்தார். இந்த அவசரநிலை 45 நாட்கள் நீடித்தது. இதை இந்தியா எதிர்த்தது. மாலத்தீவில் அனைத்து அரசமைப்பு நிறுவனங்களும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றும் அவசரநிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் இந்தியா கூறியிருந்தது.

மாலத்தீவில் ஏற்பட்ட நெருக்கடியால் இந்தியா சீனா ஆகிய இரு நாடுகளும் கவலைக்குள்ளாயின. இந்த நெருக்கடிக்கு மத்தியில், யாமீன் தனது தூதர்களை சீனா, பாகிஸ்தான் மற்றும் சௌதி அரேபியாவுக்கு அனுப்பினார். இதன் பின்னர், மாலத்தீவின் உள்விவகாரங்களில் எந்த நாடும் தலையிடக் கூடாது என்றும், சர்வதேச சமூகம் இதில் ஆக்கப்பூர்வமான பங்கை வகிக்க வேண்டும் என்றும் சீனா எச்சரித்தது. எந்தச் சூழ்நிலையிலும் மாலத்தீவின் இறையாண்மையை மீறக்கூடாது என்று சீனா கூறியிருந்தது. மறுபுறம், மாலத்தீவின் எதிர்க்கட்சித் தலைவர் நஷீத் இந்தியா உதவ வேண்டும் என்று விரும்பினார்.

நீதிபதிகள் காவலில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு இந்தியாவிடமிருந்து ராணுவத் தலையீட்டையும் அவர் எதிர்பார்த்தார். அவர் அமெரிக்காவிடமும் உதவி கோரினார்.

### மாலத்தீவிற்கு சென்ற சீனாவின் போர்க்கப்பல்கள்

இந்த நெருக்கடிக்கு மத்தியில், ஒரு சீன செய்தி இணையதளத்தை மேற்கோள்காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம், சீன போர்க்கப்பல்கள் மாலத்தீவு நோக்கி நகர்ந்ததாகச் செய்தி வெளியிட்டிருந்தது.

சுந்தா மற்றும் லாம்போக் ஜலசந்தி வழியாக சீன போர்க்கப்பல்கள் நகர்வதை இந்திய கடற்படையும் உறுதி செய்துள்ளது.

இருப்பினும், இந்தியப் பெருங்கடலில் சீன போர்க்கப்பல்கள் நிலைநிறுத்தப்படுவது புதிய விஷயமல்ல. ஜிபூட்டியில் சீனாவுக்கு ஏற்கெனவே ராணுவ தளம் உள்ளது.

மாலத்தீவில் சீனாவின் இருப்பு இந்தியப் பெருங்கடலில் அதன் மூலோபாய நடவடிக்கையின் ஒரு பகுதியாக உள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு, மாலத்தீவு ஒரு தீவை வெறும் 40 லட்சம் அமெரிக்க டாலர்களுக்கு ஒரு சீன நிறுவனத்திற்கு 50 ஆண்டு குத்தகைக்கு வழங்கியது.

மறுபுறம், இந்தியாவுக்கும் மாலத்தீவு முக்கியத்துவம் வாய்ந்த நாடுதான். மாலத்தீவு இந்தியாவுக்கு மிக அருகில் இருக்கிறது. அங்கு சீனா காலூன்றினால், இந்தியாவுக்குக் கவலை ஏற்படுவது இயல்பு.

மாலத்தீவு இந்தியாவின் லட்சத்தீவில் இருந்து 700 கி.மீ. தொலைவிலும், இந்தியாவின் பிரதான நிலப்பரப்பில் இருந்து 1,200 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

மாலத்தீவும், சீனா மற்றும் பாகிஸ்தானின் லட்சியத் திட்டமான ‘ஒன் பெல்ட் ஒன் ரோடு’ திட்டத்திற்கு வெளிப்படையாக ஆதரவளித்து வருகிறது. இந்தியா மாலத்தீவில் இருந்து விலகிச் சென்றால், தெற்காசியா-வின் மற்ற சிறிய நாடுகளிலும் சீனாவின் செல்வாக்கு அதிகரிக்கும். ●

# 1973 போல இஸ்ரேல் மீண்டும் ஒரு பல முனைப் போரை சந்திக்க நேரிடுமா?

யோலண்டே ஆணி



1973 ல் இஸ்ரேல் மீது எகிப்து மற்றும் சிரியா ஆகிய நாடுகள் திடீர் தாக்குதல் நடத்திய பின் சுமார் ஐம்பது ஆண்டுகள் கழித்து, பாலத்தீன ஆயுதக் குழுவான ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது ஒரு பெரிய தாக்குதலை சனிக்கிழமை நடத்தினர்.

ஹமாஸின் இந்தத் தாக்குதல் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில், யூதர்களின் விடுமுறை தினமான ஷபாத் அன்று நடந்தது.

1973ல் நடந்த அந்தத் தாக்குதல் அக்டோபர் போர் என அழைக்கப்படுகிறது. அந்தப் போர் தான் அரபு மற்றும் இஸ்ரேல் தரப்புகளுக்கு இடையே நடந்த முதல் போர் அல்லது யோம் கிப்பர் போர் என்று அறியப்படுகிறது.

இந்தச் சண்டையில், சிரியா கோலன் குன்றுகளிலிருந்து இஸ்ரேலைத் தாக்கியது. எகிப்து சூயஸ் கால்வாயிலிருந்து இஸ்ரேலைத் தாக்கி விரைவாக இஸ்ரேலுக்குள் நுழையத் தொடங்கியது.

இஸ்ரேல் அமெரிக்காவின் உதவியைக் கேட்டபோது, சோவியத் யூனியன் எகிப்து மற்றும் சிரியாவின் பக்கம் நின்றது. மேலும் போர் மிகத் தீவிரமாக நடைபெற்றது.

பல நாட்கள் நீடித்த இந்த மோதலுக்குப் பிறகு, சினாய் மாகாணத்தில் இருந்து இஸ்ரேல் தனது ராணுவத்தை முற்றிலுமாக விலக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

சனிக்கிழமையன்று ஹமாஸ் இஸ்ரேலுக்கு எதிராக "அல்-அக்ஸா ஸ்டார்ம்" என்ற பெயரில் தாக்குதலைத் தொடங்கியது. ஒருபுறம், ஹமாஸ் ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை இஸ்ரேல் மீது ஏவியது. மறுபுறம், ஹமாஸ் போராளிகள் பல இடங்களில் இருந்து எல்லையைத் தாண்டி தரை வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

இதுவரை கிடைத்துள்ள செய்திகளின்படி இத்தாக்குதலினால் இஸ்ரேலில் 600 பேர் உயிரிழந்துள்ளதாகவும், சுமார் 100 இஸ்ரேலியர்களை ஹமாஸ் பிணைக் கைதிகளாக பிடித்துள்ளதாகவும் நம்பப்படுகிறது.

காஸா அதிகாரிகளின் கூற்றுப்படி, இஸ்ரேலின் பதிலடி நடவடிக்கையில் இதுவரை 370 பேர் உயிரிழந்துள்ளனர்.


### சனிக்கிழமை காலை தொடங்கிய திடீர் தாக்குதல்

சமீப காலங்களில், காசா பகுதியில் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது, ஆனால் பாலத்தீன ஆயுதக் குழுவான ஹமாஸோ அல்லது காசா நிர்வாகத்தை கவனிக்கும் இஸ்லாமிய குழுக்களோ அல்லது இஸ்ரேலோ அதை அதிகரிக்க விரும்பவில்லை என்று மக்கள் நம்பினர்.

ஆனால் ஹமாஸ் இது தொடர்பாக மிகவும் சிக்கலான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நடைமுறையை உருவாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. சனிக்கிழமை காலை இதைச் செய்து இஸ்ரேல் மீது ராக்கெட் மழையைப் ஹமாஸ் குழுவினர் பொழிந்தனர்.

இஸ்ரேல் மீது 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராக்கெட்டுகளை வீசியதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. சில ராக்கெட்டுகள் ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் வரை சென்றடைந்தன. மறுபுறம், பாலத்தீன போராளிகள் தரை மற்றும் கடல் வழியாக தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

பல மணி நேரம் வரை இந்த போராளிகள் இஸ்ரேலிய நகரங்களையும் இராணுவ நிலைகளையும் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அவர்கள் இஸ்ரேலில் பலரைக் கொன்றுவிட்டு, பொதுமக்களையும்,



ராணுவ வீரர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு காசா சென்றுவிட்டனர்.

சனிக்கிழமையன்று பகல் முழுவதும், ஹமாஸ் தாக்குதலின் படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவி, முக்கிய ஊடகங்களில் நேரடியாக செய்திகளாக ஒளிபரப்பப்பட்டன.

காசா எல்லைக்கு அருகே இரவு விருந்துக்காக கூடியிருந்த ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய குடிமக்கள் திடீரென தாக்குதலுக்கு உள்ளானதால் அதிர்ச்சி அடைந்தனர்.

சமூக வலைத்தளங்களில் வெளியான வீடியோவில், நூற்றுக்கணக்கான மக்கள் திறந்தவெளியில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கும் இங்கும் ஓடுவது தெரிந்தது.

ஆயுதம் தாங்கிய போராளிகளிடமிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மரங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டதாகவும், அவரது தோழர்கள் தன்னைத் தேடி வந்ததாகவும் கிலி யோஸ்கோவிச் என்பவர் ஊடகங்களிடம் கூறினார்.

"அவர்கள் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு நகர்ந்து துப்பாக்கிகள் மூலம் சுடுகிறார்கள். இருபுறமும் அவர்கள் குண்டுகளை வீசினர். எல்லா இடங்களிலும் சடலங்கள் கிடந்ததை நான் கண்டேன்" என்று அவர் கூறினார்.

"பரவாயில்லை, நான் சாகப் போகிறேன். மூச்சை வெளியில் விட்டுக் கண்களை மூடிக்கொள்" என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். "அவர்கள் எல்லா இடங்களிலும் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தார்கள்.



அவர்கள் எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்தனர்."

இஸ்ரேலின் ஹயோம் செய்தி நிறுவனம் கிபுட்ஸ் பெர்ரியில் வசிக்கும் எல்லா என்ற பெண்ணிடம் பேசியது. ராக்கெட் தாக்குதல் சைரன் ஒலித்த போது தனது தந்தை பாதுகாப்பான இடத்தில் தஞ்சம் அடைந்ததாக எல்லா கூறுகிறார்.

அவர் கூறியபோது, "தாக்குதல்தாரிகள் தங்குமிடத்திற்குள் நுழைந்ததாக அவர்கள் எனக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள். அவர்களின் படங்களை டெலிகிராமில் பார்த்தேன். அவை காசாவில் எடுக்கப்பட்டவை. எனக்கு இன்னும் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது." என்றார்.

### காசாவில் ஆரம்ப எதிர்வினை என்ன?

இச்சம்பவத்திற்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படை எதிர்பார்த்தது போல் விரைவாக பதிலடி கொடுக்கவில்லை என பல இஸ்ரேலியர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். மக்களுக்கு உதவ ராணுவம் விரைவாக வரவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், ஹமாஸ் தொலைக்காட்சியில் வெளியான காட்சிகளில், பாலத்தீன போராளிகள் இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மற்றும் டாங்கிகளை கைப்பற்றிய காட்சிகளும், அவர்கள் இஸ்ரேலிய வீரர்களைக் கொல்லும் காட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

காசாவில் இருந்து கிடைத்த முதற்கட்டப் படங்களில், தாக்குதலுக்குப் பிறகு மக்கள் கொண்டாடும் காட்சிகளும், பாலத்தீன போராளிகள் இஸ்ரேலிய இராணுவ வாகனங்களை சூறையாடி அதில் சுற்றித் திரியும் காட்சிகளும் இருக்கின்றன.

காசா நகரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஊடகங்களிடம் பேசியபோது, "ஹமாஸ் குழுவினரின் தாக்குதல் நடவடிக்கை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அல்-அக்ஸாவில் இஸ்ரேலின் செயல்களுக்கு பதிலடியாக ஹமாஸ் பழிவாங்கியுள்ளது," என்று கூறினார்.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள கிழக்கு ஜெருசலேமை ஒட்டிய அல்-அக்ஸா மசூதியின் வளாகத்தையே இந்த இளைஞர்கள் குறிப்பிடுகின்றனர். அங்கு சமீப காலமாக யூதர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அல்-அக்ஸா மசூதி இஸ்லாத்தின் மூன்றாவது புனிதமான இடமாகக் கருதப்படுகிறது. அதேசமயம் யூதர்களும் தங்கள் புனிதமான இடமாகக் கருதுகின்றனர். அவர்



கள் அதை 'டெம்பிள் மவுண்ட்" என்று அழைக்கிறார்கள்.

காசாவில் உள்ள நிர்வாகம் அருகிலுள்ள பகுதியை இஸ்ரேல் தாக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும், இந்த இளைஞர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.

அந்த இளைஞர் தொடர்ந்து பேசிய போது, 'எங்கள் எதிர்காலம் குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம். 2021 இல், இஸ்ரேலில், ஷோரூக் டவர் தாக்கப்பட்டது. அப்போது எனது குடும்பத்துக்குச் சொந்தமான கடை அழிக்கப்பட்டது. இந்த முறை ஹமாஸின் தாக்குதல் முன்பைவிட பெரிய நடவடிக்கை. எனவே இஸ்ரேலின் பதிலடியை எதிர்பார்க்கலாம். அதுவும் பெரிதாக இருக்கும் என்றே நினைக்கிறேன்," என்று கூறினார்.

பாலத்தீனப் பகுதிகளில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்கள் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த தாக்குதல்களின் விளைவாக பாலத்தீனத்தில் மருத்துவமனைகளில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

தோராயமாக 2.3 மில்லியன் பாலத்தீனிய குடிமக்கள் வசிக்கும் காசா பகுதி 2007 இல் ஹமாஸ் அமைப்பால் கைப்பற்றப்பட்டது. இதற்கு ஓராண்டுக்கு முன் இங்கு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் அமைப்புதான் வெற்றி பெற்றது.

அந்த நேரத்தில், இஸ்ரேலும் எகிப்தும் இந்தப் பகுதியின் எல்லையில் முற்றுகையை இறுக்கியிருந்தன. இப்பகுதியில் வேலையில்லமல் திண்டாடியோரின் எண்ணிக்கை விகிதம் 50 சதவீதமாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்தன. அதன் பிறகு எகிப்து, கத்தார் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை நடத்திய மத்தியஸ்தத்துக்குப் பின் இருதரப்புக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் நிறைவேறியது. காஸாவில் வசிக்கும் மக்கள் இஸ்ரேலில் பணிபுரிய அனுமதி அளிக்கப்படும் என்றும் சில கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என்றும், அதற்கு பதிலாக ஹமாஸ் எல்லையில் அமைதியாக இருக்க வேண்டும் என்றும் இருதரப்பும் ஒப்புக்கொண்டன.

### அடுத்து என்ன நடக்கும்?

கடந்த மாதம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பைப் போல் நூற்றுக்கணக்கான வேலிகளால் ஆன எல்லைக்கு அருகில் பாலத்தீனர்கள் கூடத் தொடங்கிய போது, ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலிடம் இருந்து கூடுதல் சலுகைகளை விரும்புவதாகவும், கத்தார் தனது உதவித் தொகையை அதிகரிக்க வேண்டுகோள் விடுக்கப் போவதாகவும் நம்பப்பட்டது.

ஆனால் இந்த சிறிய அளவிலான கூட்டங்கள் இப்போது எச்சரிக்கை மணி அடிப்பதைப் போல் தெரிகி



றது. சிலர் இது வேலியின் கணக்கெடுப்பு அல்ல, இதனால் எங்கிருந்து வேலியை உடைக்க முடியும் என்பதைக் கண்டறிய முடியும் என்று கூறுகிறார்கள். ஒருசிலர் அந்த வேலியைக் கடந்து வருவதற்கான முயற்சிகளை அந்தக் குழுவினர் மேற்கொண்டதாகவும் கருதினர்.

ஹமாஸ் அமைப்பின் சமீபத்திய பிரச்சாரத்தின் மூலம், மீண்டும் ஒரு கிளர்ச்சி நடத்தி, இஸ்ரேலை அழிப்பதே அதன் முக்கிய நோக்கம் என்று அதன் பிம்பத்தை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறது. ●